பக்கங்கள்: 13

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 08 வள்ளுவர் ஆண்டு 2055 தை 12 வெள்ளிக்கிழமை 26.01.2024 கதிர் 80

# மக்கள் குரலை முடக்காதீர்கள்

## இலங்கையிடம் அமெரிக்கா வலியுறுத்து

சட்டங்களை வகுக்கும் போது மக்களின் குரலை முடக்காமல் இருப்பதை உறுதிப்படுத்துங்கள் என்று அமெரிக்கா இலங்கையிடம் வலியுறுத்தியுள்ளது. கொழும்புக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலிசங் தனது உத்தியோகபூர்வ எக்ஸ் பக்கத்தில் இதனைத் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட நிகழ்நிலை காப்பு சட்டமூலம் தொடர்பில் பதிவிட்டுள்ள அவர், அதில் மேலும் தெரிவித்துள்ளதாவது:

நிகழ்நிலைக் காப்புச் சட்டத் திருத்தம் மூலம் கருத்துச் சுதந்திரம், புத்தாக்கம் மற்றும் தனியுரிமைக்கு அச்சுறுத்தல் ஏற்படுவதாக சிவில் சமூக மும் தொழில்நுட்ப நிறுவனங் ☞ 2

## இது ரகசியம் அல்ல!

தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் தேர்தல் முடிந்தாலும் அதில் நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரன் வென்றாலும் கட்சிக்குள் இன்னும் தேர்தல் போட்டி மனோநிலை முடிவுக்கு வந்தபாடாகத் தெரியவில்லை.

திருகோணமலையில் ஜனவரி 21 நடந்த கட்சியின் பொதுக் குழுக் கூட்டத்தில் புதிய தலைவருக்கான வாக்கெடுப்பு நடத்தப்பட்டது. அதில் 183 வாக்குகளைப் பெற்று சிறீதரன் வெற்றிபெற்றார். எனினும் நாளை மீண்டும்கூடும்கட்சியின்பொதுக்குழு புதிய தலைவரின் கீழான புதிய நிர்வாகத்தைத்தெரிவுசெய்யவுள்ளது. அதன் பின்னர் ஞாயிற்றுக்கிழமை நடக்கவுள்ள கட்சியின் தேசிய மாநாட்டில்தான் இந்தப் புதிய ☞ 2

## கறுப்பு ஜனவரி நினைவேந்தல் யாழ்ப்பாணத்தில்



ஊடகவியலாளர்கள் மீதான நீதிக்குப்புறம்பான கொலைகள் மற்றும் காணாமல் ஆக்கப்பட்டமைக்கு ☞ 2

### அடுத்த 4 ஆண்டுகளில்

## உலக ஒழுங்கு மாற்றமடையபோகிறது தமிழர் எதிர்காலமும் மாறவேண்டும்

### இப்படிக் கூறுகிறார் தமிழ் அரசுக் கட்சித் தலைவர் சிறீதரன்

அடுத்த நான்கு ஆண்டுகளுக்குள் உலக ஒழுங்கில் மாற்றம் ஏற்படப்போகின்றது, அதேபோன்று தான் தமிழ் மக்களினது எதிர்காலத்திலும் மாற்றங்கள் நிகழ்வதை எதிர்பார்க்கின்றோம் என்று இலங்கைத் தமிழரசுக்கட்சியின் தலைவரும் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான சிவஞானம் சிறீதரன் தெரிவித்தார்.

இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் ☞ 2

## நிறைவேற்றப்பட்ட நிகழ்நிலை காப்பு சட்டத்தில் ஒப்பமிடாதிருக்கச் சபாநாயகரைக் கோருவோம்

### நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் தெரிவிப்பு

உயர் நீதிமன்றத்தினால் பரிந்துரைக்கப்பட்ட விடயங்கள் உள்ளீர்க்கப்படும் வரையில் நிகழ்நிலைக் காப்புச் சட்டத்தில் கையொப்பமிடாதிருக்குமாறு சபாநாயகரிடத்தில் கோரிக்கை விடுக்கவுள்ளதாக இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

தனியார் தொலைக்காட்சி யொன்றுக்கு வழங்கிய செவ்வியின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அந்நிகழ்வில் அவர் அவர் மேலும் தெரிவித்ததாவது:

நிகழ்நிலைப் காப்புச் சட்டமூலத்தை நிறைவேற்றுவதற்காகக் கொண்டுவந்தபோது அதற்கு எதிராக உயர் நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்யப்பட்டது. அவ்வாறு மனுத்தாக்கல் செய்யப்பட்ட ☞ 2

## நாட்டுக்கு கருத்துச் சுதந்திரத்தை ஆட்சியாளர்கள் வழங்கமாட்டார்

### விஜித ஹேரத் எம்.பி. தெரிவிப்பு

ஆளும் தரப்பினர் வழமையைப்போன்றே தான்தோன்றித்தனமாகத் தமது அதிகாரத்தினைப் பயன்படுத்தி மக்கள் விரேதச் சட்டத்தினை நிறைவேற்றிக் கொண்டுள்ளனர். இந்த ஆட்சியாளர்கள்நாட்டுக்கு கருத்துச்சுதந்திரத்தினை வழங்குவார்கள் என்று நீங்கள்கருதவேண்டாம். நாடாளுமன்றம் என்ற மீயுயர்சபையில்அவர்கள் மக்கள் பிரதிநிதிகளின் குரலுக்கே சுதந்திரம் வழங்கவில்லை என்று தேசிய மக்கள் சக்தியின் கம்பஹா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் தெரிவித்தார்.

திருகோணமலையில் நேற்று நடைபெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும்தெரிவித்ததாவது:

நாடாளுமன்றத்தில் நிகழ்நிலைக் காப்புச் சட்ட மூலத்தினைச் சமர்ப்பித்தபோது அதில் நீதிமன்றத்தின் உத்தரவுக்கு அமைவாகச் ☞ 2

### பியகம போன்ற முதலீட்டு வலயங்கள் மூலம்

## பொருளாதார வேகத்தினை 10 மடங்கு அதிகரிக்க திட்டம்

### ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு

நாடு முழுவதும் பியகமபோன்றமுதலீட்டு வலயங்களைஉருவாக்கி நாட்டின் பொருளாதார வேகத்தை பத்து மடங்கு அதிகரிக்கத் திட்டமிட்டுள்ளோம் என்று ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க உறுதியளித்தார்.

சபுகஸ்கந்த அபேசேகரராம விகாரையில் புதிதாகநிர்மாணிக்கப்பட்ட போதி மதில் மற்றும் தங்க வேலி திறப்பு நிகழ்வில்நேற்றுமுற்பகல் கலந்து கொண்டபோதே ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

அபேசேகரராமய இப்பிரதேசத்தின் பிரதான விகாரையாக இருந்தது. பியகமதொகுதி அமைப்பாளராகவும் ஐக்கியதேசியக்கட்சியின் பியகமவேட்பாளராகவும் முதல் தடவையாக இந்த இடத்திற்கு வந்தேன். அப்போதுபியகமமிகவும் பின்தங்கிய பிரதேசமாக இருந்தது.

பியகமவிற்கு அடுத்தபடியாக பின்தங்கிய பகுதியாக அகலவத்தை மட்டுமே இருந்தது. இருப்பினும் அகலவத்தையில் தேயிலைத் தோட்டங்கள், இறப்பர் தோட்டங்கள், தேயிலைத் தொழிற்சாலைகள் என்பன காணப்பட்டன. ஆனால் பியகமவில் ஒரேயொரு எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம் மாத்திரமே இருந்தது.

இந்த தொகுதியில் தரமான பொருளாதாரம் இல்லை, உறங்கும் அறையை போல் இருக்கிறது. காலையில் எழுந்து சென்று, மாலையில் உறங்குவதற்காக மட்டும் இங்கு வருவதாக சிலர் கூறினார்கள். இருப்பினும், அப்போதைய தேர்தல் காலத்தில் இப்பகுதிக்கு அருகிலுள்ள ☞ 11

## அதிகாலையில் நடந்த விபத்தில் இராஜாங்க அமைச்சர் உயிரிழப்பு

### சனத் நிஷாந்தவின் இறுதிக்கிரியை ஞாயிற்றன்று

கட்டுநாயக்கஅதிவேக நெடுஞ்சாலையில் நேற்று அதிகாலை இடம்பெற்ற வாகன விபத்தில் இராஜாங்க அமைச்சர் சனத் நிஷாந்த மற்றும் அவரது பாதுகாவலரான பொலிஸ் அலுவலர் ஆகியோர் உயிரிழந்தனர்.

முன்னால் பயணித்துக் கொண்டிருந்த கொள்கலன் பாரவூர்தி ஒன்றின் பின்பகுதியில் அமைச்சரின் வாகனம் அதிகாலை 2 மணியளவில் மோதியதில் இந்த விபத்து நிகழ்ந்தது என்று பொலிஸார் தெரிவித்தனர். விபத்தில்மூவர் படுகாயமடைந்திருந்த நிலையில், ராகம வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்படும் வழியில் இருவர் உயிரிழந்தனர் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

இராஜாங்கஅமைச்சர் சனத் நிஷாந்த புத்தளம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் ஆவார். அங்கு இடம்பெற்ற நிகழ்வுகளில் கலந்து கொண்டுவிட்டு கொழும்புக்குத்திரும்பிய போதே இந்த விபத்து இடம்பெற்றது என்று தெரிவிக்கப்படுகின்றது. அரகலய ☞ 2

## இனிப்புப் பண்டத் தொழிற்துறையை ஏற்றுமதித் துறையாக்க அரசு உதவும்

### ஜனாதிபதி அறிவிப்பு

இனிப்புப் பண்டத் தொழில்துறையை முன்னணி ஏற்றுமதித் துறையாகமாற்றுவதற்கு அரசு ஆதரவளிக்கும் என ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்தார்.

கொக்கோ உள்ளிட்ட பயிர்களைப் பயிரிடுவதற்கு அரசுக்குச் சொந்தமான தோட்டங்களை குத்தகை அடிப்படையில் வழங்கத் திட்டமிட்டுள்ளதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

கொழும்பு சினமன் கிரேண்ட் ஹோட்டலில் நேற்று பிற்பகல் நடைபெற்ற இலங்கை இனிப்புப் பண்ட உற்பத்தியாளர் சங்கத்தின் 30ஆவது பொதுச் சபைக் கூட்டத்தில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க இதனைத் தெரிவித்தார்.

சிலாபம் மற்றும் குருநாகல் பிரதேசங்களில்உள்ளதோட்டங்களுக்குச் சொந்தமான அனைத்துக் காணிகளையும், ஜனதா தோட்ட அபிவிருத்திச் சபை , அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான எல்கடுவ உள்ளிட்ட ஏனைய காணிகளையும் இதற்காகப் பயன்படுத்துவது குறித்துஅவதானம் ☞ 2

## இசைஞானி இளையராஜாவின் மகள் பவதாரனி திடீர் மறைவு

இசைஞானி இளையராஜாவின் மகளும் பின்னணிப் பாடகியுமான பவதாரிணி உடல்நலக்குறைவால் காலமானார்.

47 வயதான அவருக்கு உடல்நலக் குறைவு ஏற்பட்டதன் காரணத்தில்கொழும்பில் உள்ளதனியார்வைத்தியசாலையான்றில்சிகிச்சை பெற்று வந்தார்.

இளையராஜா இசையமைத்தராசய்யா திரைப்படத்தின் மூலம் பவதாரிணி பாடகியாக அறிமுகமானார். ☞ 2

## இனி இது .....

நிர்வாகம் தனது பொறுப்புக்களை ஏற்றுக்கொள்ளும்.

நாளை நடக்கவிருக்கும் கட்சியின் ஏனைய நிர்வாகிகள் தெரிவுதான் இப்போது பரபரப்பாகி இருக்கின்றது. கட்சியின் முக்கிய பொறுப்புக்களில் ஒன்று செயலாளர் பதவி. இன்னும் சொல்லப்போனால் கட்சிகள் தேர்தலுக்கானவை என்கிற வகையில் தலைவர் பதவியைவிடவும் அதிகாரம் மிக்கது செயலாளர் பதவி. தேர்தல் திணைக்களம், தேர்தல்கள் ஆணைக்குழு என்பவற்றுடன் நேரடியான தொடர்பாடலுக்கு அதிகாரமளிக்கப்பட்ட கட்சியின் உத்தியோகத்தர் செயலாளர்தான். ஒரு கட்சியின் வேட்பு மனுவைத் தாக்கல் செய்வதிலிருந்து தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினரை நியமிப்பது வரை செயலாளருக்கே முழுமையான அதிகாரம் வழங்கப்பட்டிருக்கின்றது.

கட்சித் தலைவரின் சம்மதம் இன்றி தமிழ் அரசுக் கட்சியின் தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை அம்பாறை மாவட்டத்திற்குச் செயலாளர் வழங்கிவிட்டார் என்கிற சர்ச்சையில் துரைராசசிங்கம் தனது பதவியைத் துறந்து வெளியேற வேண்டிய நிலைமைக்கு ஆளானார். 2020 தேர்தலில் கட்சிக்குக் கிடைத்த ஒரேயொரு தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை, அந்தத் தேர்தலில் தோல்வியடைந்த கட்சித் தலைவர் மாவை சேனாதிராசாவுக்கு வழங்கப்படவேண்டும் என்று கட்சிக்குள் ஒரு சாரார் விருப்பப்பட்ட நிலையில், செயலாளர் தேர்தல்கள் ஆணைக்குழுவிற்கு அம்பாறை மாவட்டத்தில் இருந்து கலையரசனுக்கு அந்தப் பதவியை வழங்கிவிட்டார் என்பதே பிரச்சினைக்குரியதாகி இருந்தது.

எனவே கட்சியின் செயலாளர் பதவி அதிகார ரீதியில் மிக முக்கியமானது. அதனால் இப்போது அந்தப் பதவியைக் கைப்பற்றுவதில் போட்டி ஏற்பட்டுள்ளதாகத் தெரிகின்றது. தமிழ் அரசுக் கட்சிக்குள் நீண்ட காலமாக ஒரு பாரம்பரியம் நிலவி வந்தது. அது, கட்சித் தலைவர் வடக்கைச் சேர்ந்தவராக இருந்தால் செயலாளர் கிழக்கைச் சேர்ந்தவராக இருப்பார் அல்லது கட்சித் தலைவர் கிழக்கைச் சேர்ந்தவராக இருந்தால் செயலாளர் வடக்கைச் சேர்ந்தவராக இருப்பார். இம்முறை கட்சித் தலைவர் வடக்கைச் சேர்ந்தவராக இருப்பதன் காரணமாக செயலாளர் பதவியை கிழக்குக்கு வழங்குவதே சரி என்கிற வகையில் போட்டிட இப்போது கிழக்கில் மையம் கொண்டுள்ளது.

சிறீதரன் வெற்றிபெற்றால் கிழக்கில் அவரைத் தீவிரமாக ஆதரித்தவரான அரியநேந்திரன் அந்தப் பதவிக்கு வருவார் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், தலைவர் தேர்தலுக்கு ஓரிரு நாள்களுக்கு முன்பாக அவர் எடுத்த ஒரு அரசியல் நகர்வாக சிறீநேசன் செயலாளர் பதவிக்கான அரியநேந்திரனின் முன்மொழிவாக மாறினார். இந்தத் தெரிவை அப்போதே சாணக்கியன் எதிர்த்தார். சிறீநேசன் மட்டக்களப்பு மாவட்டத்தின் தெரிவல்ல அவர் அரியநேந்திரனின் தெரிவு மட்டும்தான் என்று குறிப்பிட்டிருந்தார்.

இந்த நிலையில் தலைமைப் போட்டியில் சுமந்திரனை ஆதரித்த தரப்பினர் இப்போது செயலாளர் பதவிக்கான போட்டியில் திருகோணமலையில் இருந்து குகதாஸனைக் களமிறக்க காய்நகர்த்தி வருகின்றார்கள் என்று கூறப்படுகின்றது. குகதாஸன் திருகோணமலையில் உறுதியான ஆதரவைப்பெற்றவராக இருந்தாலும் பெருந் தலைவர் சம்பந்தனுக்கும் அவருக்கும் இடையில் நிலவி வருவதாகத் தோன்றும் சர்ச்சைகளின் காரணமாக சில நெருக்கடிகளையும் எதிர்கொண்டு வருகின்றார்.

போட்டியில் நிற்பதற்கு குகதாஸன் சம்மதித்து சிறீநேசனுக்கும் அவருக்கும் இடையில் போட்டி இருக்கமாக இருந்தால், தலைமைப் போட்டி போன்றே இதுவும் மிகவும் நெருக்கமான போட்டியாக அமையும் என்று எதிர்பார்க்கலாம். எனவே நாளைய பொதுக்குழுக் கூட்டமும் விறுவிறுப்புக்களுக்குப் பஞ்சம் இல்லாம் நடக்கும்.

எல்லாத் தரப்பினரையும் அரவணைத்து ஒன்றிணைந்து செல்வேன் என்று கூறியிருக்கும் கட்சித் தலைவர் சிறீதரன், சுமந்திரன் தரப்பினரையும் இணைத்துக்கொண்டு பயணிக்க வேண்டும் என்கிற அடிப்படையில் அவர்களின் தெரிவாக முன்மொழியப்படுபவரை செயலாளராக்கிக் கொள்வாரா அல்லது தனக்கு வாகன, ஆதரவான, எதிர்காலத்தில் பிரச்சினைகளைத் தராத ஒருவரைத் தன்னுடைய செயலாளராக்கிக் கொள்வாரா என்பதைப் பொறுத்திருந்து பார்ப்போம்.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## மக்கள்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களும் அடங்கலான பிரதான தரப்பினர் முன்வைத்த முக்கிய விடயங்கள் உள்வாங்கப்படவில்லை.

அவை முதலீடுகளையும் டிஜிட்டல் பொருளாதார அபிவிருத்தியையும் பாதிப்பதாக அமைந்துள்ளதோடு, இச்சட்டம் தொடர்பில் அமெரிக்கா கவலையடைந்துள்ளது. இவ்வாறான செயற்பாடுகள் மூலம் ஜனநாயகத்தின் பெறுமதி ஆபத்தில் வீழ்ந்துவிடும் அபாயம் இருக்கின்றது.

அதிக வரையறைகளை விதிக்கும், தெளிவற்ற சட்டங்கள் மூலம் இலங்கையின் பொருளாதார அபிவிருத்தி பாதிக்கப்படுவதோடு வெளிப்படைத்தன்மைக்கு முன்னுரிமை வழங்குமாறும், சட்டங்களை வகுக்கும் போது மக்களின் குரலை முடக்காமல் இருப்பதை உறுதிப்படுத்துமாறும் அமெரிக்கா இலங்கையிடம் கோரிக்கைவிடுக்கிறது என்றுள்ளது.

## உலக ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மன்னார் மாவட்டக்கிளையின் ஏற்பாட்டில் நேற்று நடைபெற்ற வரவேற்பு நிகழ்வின்போது உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

அடுத்த நான்கு ஆண்டுகளுக்குள் உலக ஒழுங்கில் மாற்றம் ஏற்படப்போகின்றது, அதேபோன்றுதான் தமிழ் மக்களினது எதிர்காலத்திலும் மாற்றங்கள் நிகழ்வதை நாம் எதிர்பார்க்கின்றோம்.

இலங்கை அரசு கடந்த காலத்தினைப் போன்று தொடர்ச்சியாகத் தமிழ் மக்களை ஏமாற்றுவதற்கு முனைந்தால் அவர்களுக்கு மூடிய பாதைப்பணமாகவே அது அமையும். அவர்களுக்கு வெளிச்சமற்ற பாதையே காணப்படும். தற்போதும் கூட இலங்கை அரசின் பொருளாதார நிலைமைகள் நெருக்கடியில் தான் உள்ளன. வேலைவாய்ப்பின்மை நீடிக்கின்றது. வற் வரிச்சுமை மக்களை வாட்டி வதைக்கின்றது. இந்த நிலைமைகளில் இருந்து மீள்வதாக இருந்தால் அரசு தனது போக்கில் மாற்றத்தினை ஏற்படுத்த வேண்டும் என்றார்.

## அதிகாலையில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போராட்டத்தின்போது புத்தளத்தில் உள்ள அவரது வீடும் எரிக்கப்பட்டிருந்தது.

இராஜாங்க அமைச்சர் சனத் நிஷாந்தவின் இறுதிக்கிரியைகளை எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது. சிலாபம் - ஆராச்சிகட்டுவ ராஜகதலுவ தேவாலயத்தில், அன்றைய தினம் பிற்பகல் 2 மணியளவில் இறுதிக்கிரியைகள் இடம்பெறவுள்ளன.

இராஜாங்க அமைச்சர் சனத் நிஷாந்தவின் பூதவுடல், மக்கள் அஞ்சலிக்காக பொரளையில் அமைந்துள்ள தனியார் மலர்ச்சாலையில் தற்போது வைக்கப்பட்டுள்ளது. அன்னாரின் பூதவுடல், சிலாபம் ஆராச்சிகட்டுவவில் அமைந்துள்ள அவரது இல்லத்திற்கு இன்று முற்பகல் 10 மணியளவில் எடுத்துச்செல்லப்படவுள்ளது.

இதனிடையே, ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க மற்றும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தலைவர் மஹிந்த ராஜபக்ஸ உள்ளிட்ட அரசியல் தலைவர்கள், சனத் நிஷாந்தவின் கொழும்பிலுள்ள இல்லத்திற்கு சென்று தமது அனுதாபங்களை தெரிவித்துள்ளனர்.

இராஜாங்க அமைச்சர் சனத் நிஷாந்த பயணித்த ஜீப் மோதிய கொள்கலன் சாரதி கைது செய்யப்பட்டுள்ளார்.

தெரணியகல பகுதியை சேர்ந்த 39 வயதான குறித்த சாரதியை வத்தளை நீதிவானிடம் முற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

1975ஆம் ஆண்டு மே மாதம் மூன்றாம் திகதி ஹலவத்தையில் பிறந்த சனத் நிஷாந்த பெரேரா நான்கு சகோதர சகோதரிகளைக் கொண்ட குடும்பத்தில் ஐந்தாவது நபராவார்.

அலாவத்தை புனித மரியாள் ஆண்கள் கல்லூரியின் முன்னாள் மாணவரான இவர், 1997 ஆம் ஆண்டு ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியில் இருந்து ஆராச்சிக்கட்டுவ பிரதேச சபைக்கு போட்டியிட்டு தேர்தல் அரசியலில் பிரவேசித்தார்.

2004ஆம் ஆண்டு முதல் வடமேற்கு மாகாண சபையை பிரதிநிதித்துவப்படுத்திய சனத் நிஷாந்த, முதலமைச்சர் பதவிக்கு இணையாக அமைச்சுப் பதவியையும் வகித்துள்ளார்.

2015ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பிலிருந்து போட்டியிட்டு 68,240 வாக்குகளைப் பெற்று மாவட்டத்தில் முதலாவதாக பாராளுமன்றத்திற்கு தெரிவானார்.

கோட்டாபய ராஜபக்ச ஜனாதிபதியாக பதவியேற்றதன் பின்னர், மீன்பிடி இராஜாங்க அமைச்சராக பதவியேற்று, அதன் பின்னர் நடைபெற்ற பாராளுமன்ற தேர்தலில் புத்தளம் மாவட்டத்தில் இருந்து அதிக வாக்குகளை பெற்ற வேட்பாளராகவும் திகழ்ந்தார்.

அவரது மனைவி சட்டத்தரணி என்பதுடன், மூன்று பெண் பிள்ளைளும், ஒரு ஆண்பிள்ளையும் இருக்கின்றனர்.

## நிறைவேற்றப்பட்ட...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிலையில், உயர் நீதிமன்றம் சதாரண பெரும்பான்மையுடன் அச்சட்டமூலத்தினை நிறைவேற்றுவதாக இருந்தால் செய்யவேண்டிய திருத்தங்கள் சிலவற்றை உயர் நீதிமன்றம் பரிந்துரை செய்திருந்தது.

ஆனால், நாடாளுமன்றத்தில் குறித்த சட்டமூலம் நிறைவேற்றப்பட்டபோது எமக்கு அதில் மேற்கொள்ளப்பட்ட திருத்தங்கள் சம்பந்தமான அறிக்கை குழுநிலையில் தெளிவாக வழங்கப்படவில்லை. அத்தோடு அத்தத் திருத்தங்கள் 12 மணிக்கு முன்னதாக நாடாளுமன்றத்தில் எமக்கு வழங்கப்பட வேண்டும் என்ற முறைமையும் உள்ளது.

ஆகவே உயர்நீதிமன்றத்தினால் பரிந்துரைக்கப்பட்ட விடயங்கள் சட்டத்தில் உள்ளீர்க்கப்பட்டிருந்தால் அவற்றை மீளாய்வுக்கு உட்படுத்தவேண்டும். தற்போதைய நிலையில் நான் 13 விடயங்கள் உயர்நீதிமன்றத்தினால் குறிப்பிட்டப்பட்டும் உள்ளீர்க்கப்படவில்லை என்பதைக் கண்டறியந்துள்ளேன்.

அதன்பின்னர் அதனை சபையில் சுட்டிக்காட்டி சபாநாயகரிடத்தில் எழுத்துமூலமாக வழங்கினேன். ஆதனை சட்டமா அதிபரின் பிரதிநிதிகளிடத்தில் வழங்குவதாக அவர் குறிப்பிட்டார். அதன் பின்னர் அத்திருத்தங்களை அமைச்சர் குழுநிலையில் இணைத்துக்கொள்வார் என்று குறிப்பிட்டார்கள்.

ஆனால் குழுநிலையில் அவை இணைத்துக்கொள்ளப்பட்டதா இல்லையா என்பது தற்போதைக்குத் தெளிவாக இல்லை. ஆகவே முழுமையாக ஆராயாத வரையில் குறித்த சட்டத்தில் கையொப்பமிடாதிருக்குமாறு நாம் சபாநாயகரைக் கோருவதற்கு உள்ளோம் என்றார்.

## நாட்டுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செய்யப்பட்ட திருத்தங்கள் தொடர்பில் நாடாளுமன்றத்துக்கு அறிவிக்கப்படவில்லை.

சட்டம் தொடர்பில் ஒருநாள் விவாதம் நடத்தப்பட்டது. மாலை ஆறரை மணியாகின்றபோது வாக்கெடுப்பு நடத்தப்பட்டது. உயர் நீதிமன்றத்தின் பரிந்துரைக்கு அமைவாக திருத்தங்கள் மேற்கொள்ளப்படவில்லை என்பது எம்மால் சுட்டிக்காட்டப்பட்டபோது சபாநாயகர் அதற்கு இடமளிக்கவில்லை. ஆளும் தரப்பு உறுப்பினர்கள் இடையூறு செய்தனர்.

உயர்நீதிமன்றத்தில் குறிப்பிடப்பட்ட விடயங்களை உள்ளீர்க்குமாறு சத்தமிட்டுக் கூறினோம். அதற்குச் சந்தர்ப்பம் அளிக்காது, இரண்டாவது வாசிப்பை மேலதிக வாக்குகளால் நிறைவேற்றினார்கள். மூன்றாவது வாசிப்பின்போதும் வாக்கெடுப்பு அவசியம் என்று வலியுறுத்தினோம். அதற்கும் செவிசாய்க்கவில்லை.

ஆளும் தரப்பினர் வழமையைப்போன்றே தான்தோன்றித்தனமாகத் தமது அதிகாரத்தினைப் பயன்படுத்தி மக்கள் விரேதச் சட்டத்தினை நிறைவேற்றிக்கொண்டுள்ளனர். ஆட்சியாளர்கள் நாட்டுக்கு கருத்துச் சுதந்திரத்தினை வழங்குவார்கள் என்று நீங்கள் கருத வேண்டாம். நாடாளுமன்றம் என்ற மீயுயர் சபையில் அவர்கள் மக்கள் பிரதிநிதிகளின் குரலுக்கே சுதந்திரம் வழங்கவில்லை என்றார்.

## இசைஞானி ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தமிழ், இந்தி, தெலுங்கு, கன்னட படங்களில் அவர் இசையமைப்பாளராகவும் செயற்பட்டுள்ளார்.

இதேவேளை, இளையராஜா எதிர்வரும் 27ஆம், 28ஆம் திகதிகளில் இசைக்கச்சேரியொன்றை கொழும்பில் நடத்துவதற்காக நேற்று முன்தினம் கொழும்புக்கு வருகை தந்திருந்தார். இந்தத் தருணத்தில் அவரது மகளது இறப்பு சம்பவித்திருந்தது.

## இனிப்புப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செலுத்தப்பட்டுள்ளதாக ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்தார்.

இதுவரை பயன்படுத்தப்படாத மகாவலி ஏ மற்றும் பி வலயங்களில் பயிர்ச்செய்கையை ஊக்குவிப்பதன் மூலம் நாட்டில் உணவுப் பாதுகாப்பை ஏற்படுத்த முடியும் எனவும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

நாட்டில் போட்டிமிக்க ஏற்றுமதிப் பொருளாதாரத்தை உருவாக்குவதற்காக தேசிய உற்பத்தித் திறன் ஆணைக்குழு நிறுவப்படும் எனத் தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, ஏனைய நாடுகளுடன் தற்போதுள்ள சுதந்திர வர்த்தக உடன்படிக்கைகளையும் தொழில்நுட்ப ஒத்துழைப்பு உடன்படிக்கைகளையும் வலுப்படுத்த அரசு எதிர்பார்த்திருப்பதாகவும் தெரிவித்தார்.

அத்துடன், தேயிலை ஆராய்ச்சி நிறுவனம், தென்னை ஆராய்ச்சி நிறுவனம் ஆகியனவும் நவீனமயப்படுத்தப்பட்டு வருவதாகவும் இந்த ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில் ஆராய்ச்சித் துறைக்காக சுமார் 8 பில்லியன் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

இனிப்புப் பண்டத் தொழில்துறையினூடாக தேசிய பொருளாதாரத்திற்கு அவர்கள் ஆற்றிய பங்களிப்பை பாராட்டி, நாட்டில் உள்ள எட்டு முன்னணி இனிப்புப் பண்ட உற்பத்தியாளர்களுக்கு ஜனாதிபதியினால் விருதுகள் வழங்கி வழங்கப்பட்டன.

மெலிபன் ஸ்தாபகர் ஏ.ஜி. ஹின்னி அப்புஹாமி, கெண்டோஸ் ஸ்தாபகர் உபாலி விஜேவர்தன, எலிபன்ட் ஹவுஸ் (சியிஎஸ்ரீஜூழிஜமிகூழிலிற்விள) ஸ்தாபகர் ஆர்தர் வொன் போஸ்னர், மஞ்சி ஸ்தாபகர் மேனக விக்ரமசிங்க, மோதா ஸ்தாபகர் ஜூலியஸ் மோதா, உஸ்வத்த ஸ்தாபகர் பி.ஜே.சி. பெரேரா, லக்கி லேண்ட் ஸ்தாபகர் சிங்கசாமி முத்தையா, செரிஸ்பிஸ்கட் ஸ்தாபகர் விதானகே ஜோன் அப்புஹாமி ஆகியோருக்கு இந்த விருதுகள் வழங்கப்பட்டன.

இலங்கை இனிப்புப் பண்ட உற்பத்தியாளர்கள் சங்கத்தின் தலைவர் கலாநிதி சமித பெரேரா, ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவிற்கு நினைவுப்பரிசை வழங்கிவைத்தார்.

கைத்தொழில் மற்றும் சுகாதார அமைச்சர் வைத்தியர் ரமேஷ் பதிரன, நிதி அமைச்சின் செயலாளர் மஹிந்த சிறிவர்தன, பொருளாதார விவகாரங்களுக்கான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் கலாநிதி ஆர்.எச்.எஸ். சமரதுங்க மற்றும் இலங்கை இனிப்புப் பண்ட உற்பத்தியாளர்கள் சங்க உறுப்பினர்கள் உள்ளிட்ட பலரும் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

## கறுப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)




நீதிகோரி யாழ்ப்பாணத்தில் நேற்று 'கறுப்புஜனவரி' நினைவுகூரப்பட்டது.



இலங்கையில் ஊடகவியலாளர்கள் பலர் ஜனவரி மாதத்தில் கொல்லப் பட்டமையை அடுத்து கடந்த பல வருடங்களாக அது ''கறுப்பு ஜனவரி'' மாதமாகக் கொண்டாடப்பட்டு வருகின்றது.

இந்தமுறை இந்தக் கறுப்பு ஜனவரி நிகழ்வு சுதந்திர ஊடக



இயக்கம் மற்றும் யாழ். ஊடக அமையம் ஆகியவற்றினால் நினைவேந்தல் மற்றும் கலந்துரையாடல் என்பன மதியம் 2



மணியளவில் யாழ். நகரில் உள்ள தனியார் விடுதியில் நடத்தப்பட்டன.

இதன்போது ஊடக சுதந்திரம், நிகழ்நிலை காப்புச் சட்டம், அந்தச் சட்டம் ஊடகங்களில் செலுத்தவுள்ள தாக்கம் எனபன தொடர்பாகவும் சட்டத்தரணிகள், ஊடகவியலாளர்கள், துறைசார் நிபுணர்களின் உரைகள் இடம்பெற்றன.

நிகழ்வில் கொல்லப்பட்ட ஊடகவியலாளர்களுக்கு நீதிகோரி சுடரேற்றி அஞ்சலி செலுத்தப்பட்டது.

நினைவேந்தலில் ஊடகவியலாளர்கள், சிவில் சமூகப் பிரதிநிதிகள், அரசியல் பிரமுகர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

# “தமிழ்த் தேசியம் மாவீரர்களின் கல்லறையில் இருந்துதான் தொடங்கவேண்டும்”

## தமிழ் அரசுக் கட்சியின் புதிய தலைவர் சிறீதரன் நேர்காணல்

கட்சியின் முக்கிய பலம் தமிழ் தேசியம்தான். அது மறைந்த ஈழத் தேசிய விடுதலைப் போராளிகளின் கல்லறையிலிருந்துதான் தொடங்கவேண்டும் என்று கட்சி உறுப்பினர்கள் என்னைத் தலைவராகத் தேர்தெடுத்ததன் மூலம் கூறியுள்ளனர்.

இவ்வாறு தெரிவித்துள்ளார் தமிழ் அரசுக் கட்சியின் புதிய தலைவராகத் தெரிவு செய்யப்பட்டுள்ளவரான சிவஞானம் சிறீதரன். திருகோணமலையில் நடந்த தலைவர் தெரிவுக்கான கட்சியின் பொதுக் குழுக் கூட்டத்தை முடித்துக்கொண்டு கிளிநொச்சி திரும்பிய பின்னர் அவர் முதன் முதலில் புலம்பெயர் ஆங்கில ஊடகமான தமிழ்கார்டியனுக்கு நேர்காணல் வழங்கியிருந்தார். அந்த நேர்காணலின் தமிழ் வடிவம் இங்கே காலைக்கதிர் வாசகர்களுக்காகத் தரப்படுகின்றது.

கே: தமிழ் அரசு கட்சியின் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளீர்கள். அனைத்துத் தரப்பினரையும் அரவணைத்துச் செல்லும் எண்ணம் உள்ளதா?

பதில்: தமிழ் மக்களின் தேசிய அபிலாஷைகளை வென்றெடுப்பதற்காக, 2009ஆம் ஆண்டுக்கு முன்னர் இருந்த தமிழ்த் தேசியவாத சக்திகளின் அணிதிரட்டலை மீண்டும் கட்டியெழுப்புவதற்கும், தலைமைப் போட்டி அல்லது போட்டி என்ற எதிர்பார்ப்பின்றி அனைவரையும் ஒன்றிணைப்பதற்கும் என்னால் இயன்ற முயற்சிகளை மேற்கொள்வேன். அப்போதுதான் தமிழ் மக்களின் உரிமைகளை வென்றெடுப்பதற்கான சரியான பாதையில் பயணிக்கமுடியும்.

தமிழ் மக்களின் தேசிய அபிலாசைகளை வென்றெடுக்கும் பயணத்தில் அனைவரையும் அரவணைத்துக் கொண்டு தியாக உணர்வோடு உழைக்க வேண்டும். அதற்காக எத்தனை விட்டுக்கொடுப்புகளையும் தியாகங்களையும் செய்ய நான் தயாராக இருக்கிறேன்.

கேள்வி: தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு 13ஆவது திருத்தச் சட்டத்திற்குள் தன்னை மட்டுப்படுத்திக்கொள்ளும் என்ற கருத்து நிலவுகிறது. கட்சியின் புதிய தலைவர் என்ற முறையில் உங்கள் நிலைப்பாடு என்ன?

பதில்: 13ஆவது திருத்தச் சட்டம் தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வாகாது என்பதை நான் பல நேர்காணல்கள், கலந்துரையாடல்கள் மூலம் மிகத் தெளிவாகக் கூறியுள்ளேன். எமது தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷைகளைப் பொறுத்தவரையில், ‘ஒற்றையாட்சி’க்குள் எட்டப்படும் எந்தத் தீர்வும் அந்த அபிலாஷைகளை நிறைவேற்றாது என்பதே எமது கருத்தாகும். கூட்டாட்சி தீர்வை நோக்கியதே எங்களின் பயணம். அதற்கேற்ப, இந்த அம்சத்தை எங்கள் கட்சியின் கொள்கையில் இணைத்துள்ளோம்.

அரசமைப்பின் 13ஆவது திருத்தச் சட்டம் இதுவரையில் எமது மக்களுக்கு அரசியல் தீர்வாக அமையவில்லை. 13ஆவது திருத்தச் சட்டத்தின் பல விதிகள் இலங்கை அரசால் ஏற்கனவே நீக்கப்பட்டுள்ளன. 13ஆவது திருத்தச் சட்டத்தை மீண்டும் மீண்டும் பயன்படுத்துவதன் மூலம் ஒரு பெரிய தீர்வை எட்ட முடியும் என்று நாம் யாரும் நினைக்கவில்லை.

தமிழர்களின் நிலம், அவர்களின் மொழி, பண்பாடு, கலாசார அடையாளங்கள் அங்கீகரிக்கப்பட்ட வடக்கு- - கிழக்கு இணைந்த ஒரு தீர்வை நோக்கியே நாம் பயணிக்கிறோம். எல்லாவற்றிற்கும் மேலாக, தமிழர்கள் இந்த மண்ணின் பூர்வீக மக்கள் என்பதை அங்கீகரிக்கவேண்டும். தமிழர்கள் ஒரு தனித்துவமான தேசிய இனக் குழு என்பதை அங்கீகரிக்கவேண்டும். எங்கள் பயணம் இந்த திசையிலேயே பயணிக்கிறது. அதற்கான நேரம் நெருங்கிவிட்டது என்று நம்புகிறோம். இது வெற்று முழக்கம் மட்டுமேயல்ல. அதனடிப்படையில் பலத்தை வழங்கக்கூடிய ஏனைய சக்திகளையும் உள்ளடக்கியிருக்கவேண்டும்.

நாம் ஏனைய கட்சிகளுடன் ஒன்றிணைந்து எமது பலத்தை வெளிப்படுத்தி அரசியல் தீர்வை அடைவதற்கான அனைத்து முயற்சிகளையும் பலமான சக்தியாக மேற்கொள்வோம்.

கே: தெரிவு செய்யப்பட்ட புதிய தலைவராக புலம்பெயர் தமிழ் மக்களுக்கு என்ன கூற விரும்புகின்றீர்கள்? புலம்பெயர் தமிழர்கள் ஈழ அரசியலில் பெரும் செல்வாக்கு பெற்றவர்களாகக் காணப்படுகின்றனர். அவர்களுக்கு உங்கள் கருத்து என்ன?

பதில்: ஈழத் தமிழர்களின் அரசியல் விடுதலைக்காக தாயகத்தில் உள்ள தமிழர்களையும் புலம்பெயர் தமிழர்களையும் ஒன்றிணைத்து தமிழ்நாட்டுத் தமிழர்களுடன் இணைந்து புதிய பாதையை உருவாக்குவது மிகவும் அவசியம் என்ற மிக முக்கியமான யோசனையை கட்சித் தலைவருக்கான தேர்தல் பரப்புரைகளின்போதே நான் தெரிவித்திருக்கின்றேன்.

புலம்பெயர் தமிழர்களுக்கும் தமிழ் அரசுக் கட்சிக்கும் இடையிலான உறவு இப்போது சீர்குலைந்துள்ளது. இந்த இடைவெளிக்கு பல்வேறு காரணங்கள் இருக்கலாம். சில சமயம் எதிர்பார்ப்புகள் அதிகமாக இருக்கலாம். அதையெல்லாம் கடந்து, ஒரு கட்டத்தில் இரு தரப்பினரதும் (புலம்பெயர் மற்றும் ஐ.டி.ஏ.கே) எண்ணங்கள் மற்றும் கோரிக்கைகள் மீது கவனம் செலுத்த நாம் அனைவரும் ஒன்றிணைய வேண்டும்.

தாயகத்தில் தமிழ்த் தேசியவாத சக்திகளை ஒன்றிணைத்து அனைவரும் சேர்ந்த ஒருவழிப் பயணத்தை உருவாக்க புலம்பெயர் தமிழர்களின் பங்கு மிக முக்கியமானது. அவர்களை அரவணைப்பதன் மூலமே ஈழ விடுதலைப் போராட்டத்தை முன்னெடுத்துச் செல்ல முடியும் அல்லது தமிழ்த் தேசிய விடுதலையை அடைய முடியும். எனவே, ஈழத் தேசிய விடுதலையை அடையும் மட்டத்தில் புலம்பெயர் தமிழர்களின் பலத்தை மேலும் அதிகரிப்பதற்கான வழிகளையும் வழிமுறைகளையும் நாங்கள் தேடி உருவாக்குவோம்.

கே: மற்றக் கட்சித் தலைவர்களைச் சந்தித்துக் கலந்துரையாடல்களில் ஈடுபட நீங்கள் தயாரா?

பதில்: நிச்சயமாக, மாநாட்டில் கட்சியின் தலைவராக நான் பொறுப்பேற்றவுடன், ஜனநாயக ரீதியான உரையாடல்களைத் தொடங்குவதற்காக மற்ற கட்சிகளின் தலைவர்களைச் சந்தித்துப் பேசுவேன். அதேவேளை வடக்கு, கிழக்கில் உள்ள சிவில் சமூகம் மற்றும் தமிழ் தேசிய செயற்பாட்டாளர்களை ஒன்றிணைத்து அவர்களுடனும் வெளிப்படையான ஜனநாயக உரையாடலை உருவாக்க வேண்டியிருக்கின்றது. புலம்பெயர் நாடுகளில் உள்ள அமைப்புகளுடனும் உரையாடல்களை ஆரம்பிக்கவேண்டும். இத்தகைய ஜனநாயக முன்முயற்சிகள் மூலம், நாம் அனைவரும் ஒரு பொதுவான தளத்தில் கவனம் செலுத்த முடியும். இது கோரிக்கைகளை முன்னெடுப்பதற்கும் பொதுவான அரசியல் கொள்கையை உருவாக்குவதற்கும் வழிவகுக்கும். இதற்காக நாங்கள் கடுமையாக முயற்சி செய்வோம்.

கே: தமிழ் அரசுக் கட்சியின் பொது நிலைப்பாட்டைப் பார்க்கும்போது, தமிழீழ விடுதலைப் புலிகள் பற்றிய விமர்சனப் பார்வை உள்ளது. குறிப்பாக, சில முன்னாள்



தலைவர்களின் கருத்துகளை இது தொடர்பாக எடுத்துக் கூறலாம். நீங்கள் தலைவராகத் தெரிவு செய்யப்பட்ட உடனேயே கனகபுரம் துயிலும் இல்லத்திற்கு நேரடியாகச் சென்று மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்தினீர்கள். உங்கள் தலைமையின் கீழ் தமிழர்களின் ஆயுதப் போராட்டம் தொடர்பாக கட்சி எடுக்கப்போகும் நிலைப்பாடு என்ன?

பதில்: நான் கடந்த 14 வருடங்களாக நாடாளுமன்ற உறுப்பினராக சேவையாற்றியிருக்கிறேன். நாடாளுமன்றத்திற்கு உள்ளேயும் வெளியேயும் எனது கொள்கை என்னவென்றால், எமது போராட்டத்திற்கு ஆதரவைப் பெற மற்ற செயல்பாட்டாளர்களுடன் சேர்ந்து மக்களும் விழித்துக் கொள்ள வேண்டும் என்பதுதான். அது வீரச்சாவடைந்த மாவீரர்களின் சமாதிகளில் இருந்து தொடங்க வேண்டும் என்பதில் எனக்குத் தெளிவான கருத்து உள்ளது. அதன்படி ஈழத் தேசிய விடுதலைக்கான திட்டம் வரையப்பட்டுள்ளது. புலிகளுக்கு எதிரான கருத்துக்கள் அல்லது தவறான புரிதல்களுடன் நம்மில் சிலர் இருக்கலாம்.

எவ்வாறாயினும், எங்கள் பொதுச் சபை உறுப்பினர்களில் பெரும்பாலானோர், அதிகமாகவோ அல்லது குறைவாகவோ 184 பேர் எனக்கு வாக்களித்துள்ளனர். இதன் பொருள் அவர்கள் எனது சித்தாந்தத்தை, கொள்கையை ஆதரிக்கிறார்கள் என்பதுதான். வேறு வார்த்தைகளில் கூறுவதானால், கட்சியின் முக்கிய பலம் தமிழ் தேசியம்தான். அது மறைந்த ஈழத் தேசிய விடுதலைப் போராளிகளின் கல்லறையிலிருந்துதான் தொடங்கவேண்டும் என்று கட்சி உறுப்பினர்கள் கூறியுள்ளனர்.

எனவே அந்த மாவீரர்களை நினைவு கூர்ந்தே எனது முதல் வணக்கம் செலுத்தப்பட்டது. நமது ஆழ் மனதில் அவர்களைப் பற்றிய நமது எண்ணங்களைப் பிரதிபலிப்பதன் மூலம் நமது பயணத்தைத் தொடங்குவோம். இது ஆயுதப் போராட்டமாக இருக்கும் என்று நான் சொல்லவில்லை. ஆயுதப் போராட்டத்தின்போது எமது போராளிகளும் எமது மக்களும் தமது இன்னுயிர்களை தியாகம் செய்த விதத்திற்கு உரிய மரியாதையையும் அங்கீகாரத்தையும் வழங்கி தேசிய விடுதலைப் போராட்டக் கருத்துக்களின் அடிப்படையில் நிரந்தர அரசியல் தீர்வை எட்டுவதற்கு முழு முயற்சி எடுப்போம்.

# தேசிய வைத்தியசாலை அவசர சிகிச்சைப் பிரிவிற்கு ரோட்டரி கழகத்தால் ரூ.35 மில்லியன் உபகரணங்கள்





இலங்கை தேசிய வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவிற்காக ரூபா 35 மில்லியன் பெறுமதியான முக்கியமான பராமரிப்பு உபகரணங்களை ரோட்டரி கழகம் கையளித்துள்ளது.

இந்நிகழ்வு புதன்கிழமை காலை கொழும்பு தேசிய வைத்தியசாலை அவசர சிகிச்சை பிரிவில் நடைபெற்றது.

இந்த திட்டத்தை மேற்கு கொழும்பு ரோட்டரி கிளப், ஜப்பானின் தெற்கு ஹமாமட்சு ரோட்டரி கிளப் மற்றும் ரோட்டரி மாவட்டங்கள் 3220 மற்றும் 2620 உடன் இணைந்து ரோட்டரி இன்டர்நேஷனல் அறக்கட்டளையின் மானியத்துடன் மேற்கொண்டது.

ரொட்டரி இன்டர்நெஷனல் தலைவர் கார்டன் ஆர். மெக்னலி மற்றும் சுகாதார அமைச்சின் சிரேஷ்ட அதிகாரிகளுடன், செயலாளர் மற்றும் இயக்குநர் ஜெனரல் மற்றும் உறுப்பினர்கள் ஆகியோர் முன்னிலையில் இவை கையளிக்கப்பட்டன. ஜப்பானின் மாவட்ட ஆளுநர்கள் - மாவட்டம் 2620 மற்றும் இலங்கை - மாவட்டம் 3220 மற்றும் ஜப்பானின் ஹமாமட்சு தெற்கு ரோட்டரி கிளப் மற்றும் மேற்கு கொழும்பு ரோட்டரி கிளப் ஆகியவற்றின் தலைவர்கள் உட்பட பலரும் இதில் கலந்து கொண்டனர். (05)

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## உண்மையான நடவடிக்கையே தேவை

**இலங்கை ஆட்சியாளர்களின் போதை ஒழிப்பு மற்றும் பதாளக் குழுக்களின் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் முறையற்றவையென்று ஐநாவே குறிப்பிட்டாலும்கூட அதனைக் கைவிடப்போவதில்லை என்றும், எந்தவித அழுத்தங்கள் வந்தாலும் தமது நடவடிக்கை தொடரும் என்றும் பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் ரிரான் அலஸும் பதில் காவல் மா அதிபர் தேசபந்து தென்னக்கோனும் மாறி மாறி சூளுரைத்து வருகின்றார்கள். ஒரு கட்டத்தில் சம்பந்தப்பட்டவர்கள் நிறுத்தவில்லை என்றால் அவர்கள் இறக்க நேரிடும் என்றுகூட அமைச்சர் மிரட்டினார்.**

**இதுவரையில் இந்த நடவடிக்கையில் 40 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்களைத் தாம் கைது செய்துள்ளனர் என்றும் அமைச்சரும் காவல் மா அதிபரும் அறிவித்துள்ளனர். இதன் மூலம் குற்றங்களைக் கட்டுப்படுத்த முடிந்துள்ளதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர். இதுவெல்லாம் சட்டத்திற்குப் புறம்பான நடவடிக்கைகள் என்ற கண்டனங்கள் பரவலாக இருந்தபோதும் அதைப் பொருட்படுத்தப்போவதில்லை என்பதில் அவர்கள் இருவரும் உறுதியாக இருக்கின்றனர்.**

**காவல்துறையினரின் நடவடிக்கைகள் இந்த நாட்டினதும் அதன் எதிர்காலத்தினதும் மக்களினதும் நம்மைக்கானது என்கிறபோது அதற்கு ஊடகங்கள் ஆதரவு வழங்கவேண்டும் என்பது ஒருபுறமிருக்க, அதனைச் செயற்படுத்தும் விதம் தவறாக, முறையற்றதாக இருக்கும்போது அதனைக் கண்டும் காணாமல் இருந்துவிடமுடியாது.**

**'யுக்திய' என்ற பெயரில் ஆளும் தரப்பினர் மேற்கொண்டுவரும் இந்த நடவடிக்கையில் பெருமளவிலான நபர்கள் கைது செய்யப்பட்டுள்ள நிலையிலும், 'தற்செயலாக'க்கூட அரசியல்வாதிகள் என்ற பெரும் போதைப்பொருள் வியாபாரிகளில் ஒருவரைக்கூட காவல்துறையினரால் நெருங்கமுடியவில்லை. அவர்களில் முன்னாள் அமைச்சர்களும் அடங்குவர். நன்கு அறியப்பட்ட போதைப்பொருள் கடத்தல்காரர் ஒருவர் கைது செய்யப்பட்டபோது சக்திவாய்ந்த அரசியல்வாதி ஒருவரால் அவர் உடனடியாகக் காப்பாற்றப்பட்டார்.**

**போதைப்பொருள் வர்த்தகத்தகம் மற்றும் பாதாள உலகக் குழுக்களுக்கும் இலங்கையின் அரசியல்வாதிகளுக்கும் உள்ள தொடர்புகள் உலகறிந்த உண்மை. அப்படியிருந்தும் அவர்களின் இடங்களில் காவல்துறையினரால் இதுவரை சோதனைகூடச் செய்யமுடிந்திருக்கவில்லை.**

**இன்னும் மோசமானது, கைது செய்யப்படும் சந்தேகநபர்களுக்காக நீதிமன்றங்களில் வாதாடும் சட்டத்தரணிகள் போதைப்பொருள் வியாபாரிகளின் பணத்தில் வாழ்கிறார்கள் என்று பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் குற்றஞ்சாட்டியிருந்தார். ஆனால், போதைப் பொருளோடு தொடர்புடையவர்களாகக் குற்றஞ்சாட்டப்படும் ஒரு அரசியல்வாதியைக்கூட அவரால் கைது செய்ய முடியாமல் இருப்பதற்காக அவர் தன்னைத் தானே என்ன சொல்லிக்கொள்ளப் போகிறார்?**

**போதைப்பொருள் வர்த்தகத்திற்கான மிகப்பெரிய சந்தைகளில் ஒன்று அமெரிக்கா. அங்கிருந்த மிகப்பெரிய போதைப்பொருள் வியாபாரிகளில் ஒருவரைக் கைது செய்தது. அவர் பெயர் எல் சாப்போ. அந்தக் கைதுடன் மட்டும் அங்கு போதைப் பொருள் வர்த்தகம் கட்டுப்பட்டுவிடவில்லை. தொடர்ந்து வளர்ந்து வருகிறது. அதற்குக் காரணம் அங்கும் பல அமெரிக்க அரசியல்வாதிகளும் நீதித்துறையைச் சேர்ந்தவர்களும் பெரிய போதைப்பொருள் வியாபாரிகளுக்கு அரசியல் ஆதரவை வழங்குகின்றார்கள் என்பதுதான்.**

**அதேபோன்று, இந்த நாட்டிலும் உண்மையான போதைப்பொருள் வர்த்தகர்களும், அவர்களுக்கு உதவும் அரசியல்வாதிகளும் சட்டத்தின் முன் நிறுத்தப்படும் வரை, நாட்டில் போதைப்பொருள் அச்சுறுத்தலை வெற்றிகரமாக எதிர்த்துப் போராடுவது சாத்தியமானதில்லை. யாருக்கும் அடிபணியமாட்டோம் என்றும் கொன்றுவிடுவோம் என்று வீரவசனங்கள் பேசுவதால் மட்டும் போதைப் பொருள் வர்த்தகத்தைக் கட்டுப்படுத்திவிடமுடியாது.**

**பொருளாதார நெருக்கடியால் பாதிக்கப்பட்டுள்ள மக்களின் கவனத்தைத் திசை திருப்புவதற்கு இதுபோன்ற உத்திகள் குறுகிய காலத்திற்கு ஆளும் தரப்பினருக்கு உதவக்கூடும். அதுவும்கூட நீண்ட காலத்திற்குப் பலிக்காது. எனவே உண்மையான குற்றவாளிகளின் மீது சரியான நடவடிக்கை எடுக்கப்படாத வரையில் போதைப் பொருள் கட்டுப்பாடு என்பது போலி வேடம்மட்டும்தான்.**

## திருடர்களை பிடித்திருந்தால் வற் வரியால் மக்களை நசுக்க வேண்டி இருந்திருக்காது

### எதிர்க்கட்சித் தலைவர் சஜித் கருத்து



நாட்டை பொருளாதார ரீதியாக வங்குரோத்தாக்கி, நாட்டு மக்களை மிகவும் நிர்க்கதியான எதிர்காலத்திற்கு ஆளாக்கிய தரப்பினர் யார் என்பதை உயர் நீதிமன்றத்தின் சமீபத்திய தீர்ப்பின் ஊடக வெளிக்கொணரப்பட்டது.

இவ்வாறு வெளிக்கொணரப்பட்ட கோட்டாபய ராஜபக்ஷ, மஹிந்த ராஜபக்ஷ, பஸில் ராஜபக்ஷ, அஜித் நிவாட் கப்ரால், எஸ்.ஆர்.ஆடிகல, பி.பி. ஜயசுந்தர, டபிள்யூ.டி.லக்ஷ்மன் மற்றும் சமந்தா குமாரசிங்க போன்றவர்களைத் தவிர பொறுப்புக் கூற வேண்டிய மேலும் பலர் இந்த அரசாங்கத்தில் உள்ளனர்.

இந்த ஊழல் மற்றும் மோசடி நடவடிக்கைகளுக்கு காரணமானவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா என வரிச்சுமைக்கு ஆளான மக்கள் கேள்வி எழுப்புகின்றனர் என எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

வற் வரியை அறவிடமால், திருடிய திருடர்களை சட்டத்தின் முன் நிறுத்த வேண்டும். ஐக்கிய மக்கள் சக்தி அரசாங்கத்தில் இந்தத் திருடர்கள் சட்டத்தின் முன் நிறுத்தப்பட்டு, அனைத்து வித தண்டனைகளும் வழங்கப்படும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

எரிவாயு, சீனி, நானோ நைட்ரஜன், நிலக்கரி மற்றும் மல உர ஊழல்கள் தொடர்பில் இதுவரை எடுக்கப்பட்டுள்ள சட்ட நடவடிக்கைகள் தொடர்பில் நிலையியற் கட்டளை 27(2) இன் கீழ் அரசாங்கத்திடம் கேள்வி எழுப்பும் போதே எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ நாடாளுமன்றத்தில் இவ்வாறு தெரிவித்தார்.

எரிவாயு, சீனி, நானோ நைட்ரஜன், நிலக்கரி, மல உரம் போன்றவற்றுக்கு எதிரான விசாரணைகள் தாமதமாக இடம்பெற்றாலும்,

நுண்,சிறு மற்றும் நடுத்தர வர்த்தகர்களுக்கு பரேட் சட்டத்தை அமுல்படுத்தி அவர்களின் சொத்துக்கள் ஏலம் விடப்பட்டு வருவதாக எதிர்க்கட்சித் தலைவர் இங்கு தெரிவித்தார்.

2019-2022 ஆம் ஆண்டில் நிகழ்ந்த பல முறைகேடுகள் தொடர்பான விசேட கணக்காய்வு விசாரணைகள் தொடர்பான பல சிக்கல்கள் உள்ளன. இது தொடர்பில் தனித்தனியாக வினவுவதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

சீனி வரி மோசடிக்கு எதிராக என்ன சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது?

இதன் பிரகாரம், 2020 ஆம் ஆண்டு ஒரு கிலோ சீனிக்கு விதிக்கப்பட்ட விசேட பண்ட வரியை 50 ரூபாவில் இருந்து 25 சதமாக அரசாங்கம் குறைத்ததன் காரணமாக,நுகர்வோருக்கு நிவாரணம் கிடைக்காத நிலையில், அரசாங்கத்திற்கு ரூ.16707 மில்லியன் இழப்பு ஏற்பட்டதாக 23.3.2022 அன்று வெளியிடப்பட்ட விசேட கணக்காய்வு அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.கோபா குழுவிற்கு அறிக்கையை அனுப்பிய பிறகு, வருமானம் பெறாததற்கு பொறுப்பான தரப்பினரை அடையாளம் காண 21 ஜூன் 2022 அன்று சி.ஐ.டிக்கு அனுப்பிவைக்கப்பட்டு 19 மாதங்கள் கடந்து விட்டன. இதற்கு பொறுப்புக்கூற வேண்டிய தரப்பினர் யார் எனக் கேள்வி எழுப்புகிறேன் என எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார். (05)

## பொது இணைக்கப்பாட்டுடனான திட்டங்களை நடைமுறைப்படுத்த எந்த தடையும் கிடையாது

### இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க கூறுகிறார்



நாடாளுமன்ற உறுப்பினர்கள் 225 பேரும் தமக்கு ஒதுக்கப்படும் நிதியில் தமது யோசனையின் கீழான திட்டங்களை நடைமுறைப்படுத்துவதில் எந்த தடையும் கிடையாது. மாவட்ட, பிரதேச அபிவிருத்தி குழு மற்றும் கிராம மட்டத்தில் இடம்பெறும் கூட்டங்களில் இணைந்து பொது இணக்கப்பாட்டுடனான யோசனைத் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கான உரிமை அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் உள்ளது என நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் தயாசிறி ஜயசேகர எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

அது தொடர்பில் மேலும் குறிப்பிடுகையில் -

வரவு - செலவுத் திட்டத்தை எதிர்த்த குழுவினர் அதன் நன்மைகளை பெற்றுக் கொள்ளும் நிலை ஏற்பட்டுள்ள போது பலாத்காரமாக அதன் பங்காளிகளாகியுள்ளதுடன் அவர்கள் வரவு செலவு திட்டத்தை எதிர்த்தாலும் மக்கள் பிரதிநிதிகளாக குழுக்களில் கலந்துகொண்டு மக்கள் இணக்கப்பாட்டுடன் யோசனைகளை நடைமுறைப்படுத்துவதற்கு எந்தத் தடையும் கிடையாது.

நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதில் நிதியமைச்சின் செயலாளர் மஹிந்த சிறிவர்தனவின் ஒத்துழைப்பை குறைவாக மதிப்பிட முடியாது.

மாவட்ட அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக பல வருடங்களுக்குப் பின் பிரதேச அபிவிருத்திக்கென 10 பில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளதுடன் தெரிவு செய்யப்பட்டுள்ள 91பிரதேச செயலாளர் பிரிவுகளுக்காக மேலும் 10 பில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

நிதி அமைச்சால் வெளியிடப்பட்டுள்ள சுற்று நிருபத்தின் ஊடாக மாவட்ட இணைப்புக் குழு தலைவர்கள் மற்றும் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளன. நேர்மையான வகையில் திட்டங்களை நடைமுறைப்படுத்தல் தொடர்பில் அந்த ஆலோசனைகள் அமைந்துள்ளன. - என்றார். (05)

## 20ஆவது திருத்தத்துக்கு நேர்ந்த கதியே நிகழ்நிலை காப்பு சட்டமூலத்துக்கும்

மனித உரிமைகள் மற்றும் ஜனநாயகம் என்பனவற்றில் சிங்கப்பூர் முன்னேற்ற நிலையில் இல்லை. ஆகவே சிங்கப்பூர் நாட்டின் மாதிரியிலான வகையில் நிகழ்நிலை காப்புச் சட்டமூலம் தயாரிக்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிடுவதை ஏற்றுக்கொள்ள முடியாது.

20 ஆவது திருத்தச்சட்டத்துக்கு நேர்ந்த கதியே நிகழ்நிலை காப்புச் சட்டமூலத்துக்கும் நேரிடும். அரசாங்கத்துக்கு எதிரான கருத்தைக் குறிப்பிடும் சகலரையும் பயங்கரவாதிகள் என்றும் சித்திரிக்கும் நிலைப்பாட்டில் இருந்துகொண்டு அரசாங்கம் செயற்படுகிறது என எதிர்க்கட்சிகளின் பிரதம கொறடாவான லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற உத்தேச




நிகழ்நிலை காப்புச் சட்டமூலத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். (05)

காலைக்கதிர் Kalaikkathir

முருகன் துணை

நல்லூர் சைவத் தமிழ்ப் பண்பாட்டுக் கலைக் கூடல்

## செவ்வழி நயனம்

# சக்தி வழிபாடு!



சக்திக்கு மிஞ்சி இவ்வுலகில் எதுவுமில்லை. சக்தி இல்லாமல் சிவன் இல்லை. இதற்கு அர்த்தநாதீஸ்வர வடிவத்தை குறிப்பிடலாம். சக்திக்குரிய விசேட விரத தினங்களுள் நவராத்திரி விரதம், வரலட்சுமி விரதம், கேதாரகௌரி விரதம் என்பனவாகும். சக்தி எனப்படுவது மூவகைப் பண்பு அல்லது மூவகை வடிவம் என காணப்படுகின்றது. அவற்றுள் சரஸ்வதி, துர்க்கை, லட்சுமி போன்ற மூவகை தெய்வங்களும் சேர்ந்து சக்தி உருவாகின்றது. சரஸ்வதி தேவி கல்வியை வழங்குகிறாள். துர்க்கையானவள் வீரத்தை வழங்குகிறாள். லட்சுமி தேவி செல்வத்தை வழங்குகிறாள்.

சிவன் பல தொழில்களையும், வரங்களையும், வேண்டியவற்றையும் எமக்கு தந்தருளுகின்றான். இது சக்தி யால் தான் சிவன் செய்தருளுகின்றான். சிவன் எதைச் செய்ய வேண்டுமானாலும் சக்தி ஆனவள் அவர் அரு கில், மனதில் எப்போதும் இருப்பதால் தான் எவற்றையும் வெற்றிகரமாக செய்து முடிக்கிறார். சக்தியானவள் சிவன் அருகில் இல்லையேல் எனில் அவர் மனம் தளர்ந்து விடுவார்.

சக்தி என்பவள் எல்லோருக்கும் ஒரு தாயைப் போல் என்றும் அருகில் இருந்து பார்த்துக் கொள்பவள். சக்தி தேவியை நாம் மனவேதனைப்படும் போதோ அல்லது எமக்கு துணையாருமில்லை என்று நினைக்கும் போதோ ‘அம்மா, தாயே, அன்னையே, மாதவியே என்றழைத்து விட்டால் அவள் ஏதாவது ஒரு வகையில் எமக்கு சந்தோசம் கிடைக்க வைப்பாள். அவளின்றி இவ்வுலகில் நாமில்லை. அவளின்றி இப்பூவுலக பிரபஞ்சத்தில் ஒரு அணுகூட அசையாது.

சக்தி வழிபாடு செய்யும் திருத்தலங்களாக நயினை நாகபூசணி அம்மன் ஆலயம், புங்குடுதீவு கண்ணகி அம்மன் ஆலயம், தெல்லிப்பளை துர்க்கை அம்மன் ஆலயம், வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலயம் என்பவற்றைக் குறிப்பிடலாம். சக்தி 64 கலைகளை வகுத்து வைத்துள்ளார். சக்தியின் வடிவங்களாக அகோர வடிவம், புன்னகை வடிவம், லட்சுமி வடிவம், சாந்தமான வடிவம் என பல வடிவங்கள் காணப்படுகின்றன. சக்தி கெட்ட எண்ணம் உள்ளவர்களுக்கு, அதாவது தீய எண்ணம் உடையவர்களுக்கு பத்திரகாளி வடிவத்தில் அவர்களை வதம் செய்து அவர்களை நல்வழிக்கு மாற்றுவாள். அவர்கள் ஏதும் கொடியவர்களாக மக்களுக்கு தீங்கு விளைவித்தால் அவள் அவர்களை வதம் செய்து பஸ்மமாக்கி விடுவாள்.

நல்லவர்களுக்கு பல துன்பங்கள் கொடுப்பாள். அவர்களைப் பரீட்சிப்பதற்காக இறுதியில் அவர்களுக்கு ஆனந்த அருள் புரிய வைப்பாள். கெட்டவர்களுக்கு நல்லவற்றை அள்ளி அள்ளி கொடுப்பாள். இறுதியில் அவர்களுக்கு அளித்த அந்த நல்லவற்றை அவர்களாலேயே வெறுக்கச் செய்து கடைசியில் அவர்களுக்கு புரிய வைப்பாள். சக்தியானவள் சிங்க வாகனத்தில் கம்பீரமான தோற்றத்தில் காட்சி கொடுப்பாள்.

மனோகரன் தேனுயா
யா/அச்சுவேலி சரஸ்வதி வித்தியாசாலை, தரம் - 11




கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இந்த விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad
Cream Caramel
BEVERAGES
Milk Drink
Pepsi M
Coca Cola Tin - 250/=
SPECIAL MENU PACKAGE

காலைக்கதிர்
Kalaikkathir

# உதிக்குமா ‘உதய சூரியன்’?

என். சத்திய மூர்த்தி



அதோ வருகிறது, இதோ வருகிறது என்று கட்சி தலைவர் மாவை சேனாதிராஜா குறளி வித்தை காட்டிக் கொண்டிருந்த தமிழ் அரசின் தலைவர் தேர்தல் கடைசியில் நடந்தேறிவிட்டது. பலரும் எதிர்பார்த்தது போல், சிவஞானம் சிறிதரன் அல்லது சிறிதரன் ‘மாஸ்டர்’ தேர்வில் பாஸ் ஆகிவிட்டார். தன்னை எதிர்த்து போட்டியிட்ட ஜனாதிபதி சட்டதரணியும் சக நாடாளுமன்ற உறுப்பினருமான சுமந்திரனை 184-:137 என்ற வாக்கில் தோல்வி அடைய செய்துள்ளார்.

கடந்த நாடாளுமன்ற தேர்தல் காலத்தில், இருவருமே ஓரணியாகப் பயணித்தார்கள். தங்களுக்கு எதிரான பிற தமிழ் அரசு தலைவர்களை ஓரம்கட்ட முயன்று, அதில் ஓரளவு வெற்றியும் பெற்றார்கள். அந்த சமன்நிலையே அவர்களை இந்த போட்டிக்குள் தள்ளிவிட்டது எனலாம். காரணம், இந்த இருவரை விடவும் தமிழ் அரசியல் பரப்பில் அதிக அனுபவம் உள்ள தலைவர்கள் இருந்தாலும் அவர்கள் யாருமே களத்தில் இறங்கவில்லை.

அந்த விதத்தில், சிறிதரன் (வயது 55), சுமந்திரன் (59) ஆகிய இருவருமே, பிற தலைவர்களோடு ஒப்பிட்டு நோக்கும்போது இளைஞர்கள். இது போன்றே, பிற தமிழர் கட்சி தலைவர்களான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் (50), செல்வம் அடைக்கலநாதன் (61) போன்றோரும் இளைஞர்களே.

முப்பத்தி மூன்றே வயதான சாணக்கியன், அடுத்த தலைமுறைக்கான, தமிழர் தரப்பின் செழுமையான விதை. ஆனால், தமிழ் தேசிய அரசியல் போட்டியில் இந்தியா, ஆயுத உதவி செய்யவேண்டும் என்றெல்லாம் அவர் கூறுவது, அவரது அரசியல் முதிர்ச்சி இன்மையையே காட்டுகிறது. அதனை அவர் திருத்திக் கொள்ளவேண்டும். அதற்கான கால அவகாசம் அவருக்கு இருக்கிறது.

என்றாலும், சமகால சமூக வலைதள அரசியலில், தற்போதைய அவரது கருத்துக்கள் எப்போதாவது அவருக்கு எதிராக தேசிய அரசியலில் பேசுபொருளாகும் வாய்ப்பு உள்ளது. அதன் தாக்கங்களை அவர் இப்போதே கணித்து, தனது அரசியல் எதிர்காலத்தையும் தமிழர்களின் சமூக-அரசியல்-பொருளாதார மீட்சியையும் யோசித்து அதற்கேற்பச் செயல்படவேண்டும்.

### மிதவாதம்-தீவிரவாதம்

கட்சித் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டதும் முதல் வேலையாக, சிறிதரன் விடுதலை புலிகள் அமைப்பின் மாவீரர்கள் சமாதியில் அஞ்சலி செலுத்தி இருக்கிறார். மாறாக, அவர் தமிழ் அரசு கட்சியின் நிறுவனரான தந்தை செல்வாவிற்குத் தான் முதலாக அஞ்சலி செலுத்தி இருக்க வேண்டும் என்ற விடயம் பேசுபொருளாகிவிட்டது.

அதற்கு அப்பாலும் சென்று, தந்தை செல்வாவின் மிதவாத கட்சியை, விடுதலைப் புலிகள் அமைப்பின் வழியில் சிறிதரன் அழைத்துச் சென்றுவிடுவாரா, என்பன போன்ற விவாதங்கள் இப்போதே சமூக வலைதளங்களில் கொடிகட்டி பறக்கின்றன. இந்த விவாதங்களும் அவற்றிற்கான காரண-காரியங்களும், ஞாயிற்றுகிழமை, கட்சி தலைமை பொறுப்பை சிறிதரன் ஏற்பதற்கு முன்னரே, தமிழ் அரசில் சித்தாந்தம் மற்றும் வழிமுறை சார்ந்த பிரிவுகளைத் தோற்றுவிக்கலாம்.

கடந்த பல தசாப்தங்களாக, தமிழ் அரசியல் பரப்பு, மிதவாதம் மற்றும் தீவிரவாதம் ஆகிய இரு அலகுகளை சார்ந்தே பயணித்து வந்துள்ளது. பல்வேறு காலகட்டங்களில் மிதவாதம் மற்றும் தீவிரவாத அரசியல் பிரிவுகள் தோன்றி வந்துள்ளன. அவற்றில், தமிழ் அரசுக் கட்சி, மிதவாதிகளின் அரணாகவே செயல்பட்டு வந்துள்ளது. அதனை விடுதலை புலிகள் அமைப்பின் தீவிரவாத போக்கோடு இணைப்பதற்கு சிறிதரன் முயற்சி எடுப்பார் என்ற ஒரு கருத்து பரவினால், அதுவே கட்சி உடைவதற்கும் காணாமல் போவதற்கும் வழிவகை செய்யும்.

கட்சி தலைவர் தேர்தலில் சுமந்திரன் தோல்வி அடைந்தாலும், அவருக்கு பதிவான 137 வாக்குகள் மிதவாத அரசியல் பரப்பினரின் ஆதரவே. சுமந்திரன் அவர்களுக்கு தலைமைத்துவம் வழங்கினார் என்பதைவிட, அவர்கள் சுமந்திரனை ஆதரித்தனர் என்பதே உண்மை. எனவே, சிறிதரனின் தலைமைத்துவ பயணத்தில் தொய்வோ, கட்சியின் பயண திட்டத்தில் மாறுதலோ தோன்றினால், அதன் அடிப்படையில் சுமந்திரன் சாரார் குரல் எழுப்புவது தவிர்க்கமுடியாதது ஆகிவிடும்.

### தேவையான விடயம்.

தேர்தல் முடிந்த கையோடு, தமிழ் அரசின் புதிய தலைவராக சிறிதரன் கட்சி குழு ஒன்றிற்கு தலைமை ஏற்று இந்தியாவின் புதிய தூதுவரான சந்தோஷ் ஜா அவர்களை சந்தித்து பேச்சு நடத்தி உள்ளார். தூதுவர் ஜா அவர்களின் அழைப்பில் நடைபெற்ற இந்தப் பேச்சுக்களில், கஜேந்திரகுமார் பொன்னம்பலம் போன்ற சில தலைவர்களும் அழைக்கப்பட்டு, கலந்துகொண்டுள்ளார்கள். சில தலைவர்கள் விடுபட்டுள்ளார்கள். அல்லது இந்தக் கூட்டத்திற்காகவாவது தவிர்க்கப்பட்டுள்ளார்கள்.

கூட்டத்தில், இந்திய தூதுவர், தமிழ் அரசியல் பரப்பில் பரந்துபட்ட ஒற்றுமை நிலவவேண்டும் என்றும் பிரச்சினைகள் குறித்த ஒருமித்த கருத்துகள் உருவாக வேண்டும் என்று சாரப்படும்படி பேசினார் என்று யாழ்ப்பாண பத்திரிகை செய்திகள் தெரிவித்துள்ளன. இதனைத் தான், தமிழ் அரசு கட்சியின் தலைவராக சிறிதரனும் தனது வேலைத் திட்டமாக அறிவித்துள்ளார். இரண்டு கருத்துமே ஒன்றாக இருந்தாலும், அவை இரண்டுமே தனிதனியாக எடுக்கப்பட்டவை.. இரண்டுமே களநிலையின் உண்மை நிலைமையை பிரதிபலிக்கின்றன.

### கழுதை தேய்ந்து...

இத்தகைய முயற்சிகளைத் தொடக்குவதற்கு முன், சிறிதரன், கட்சியை ஒரு கட்டுக்கோப்பாக முன்னிறுத்த வேண்டிய முயற்சிகளை முன்னெடுக்கவேண்டும். கட்சித் தலைவர் தேர்தல் காலத்தில், இரு வேட்பாளர்களும் மாறி மாறி மற்றவரை குறிவைத்து கீழ் தர பரப்புரைகளை மேற்கொள்ளவில்லை என்று பத்திரிகை செய்திகள் கூறின. இது காரணமாக கட்சி பொறுப்பை ஏற்றதும், சிறிதரன் சுமந்திரனோடு சேர்ந்து பயணிப்பது கடினமான விடயமாக இருக்காது.

அந்த வகையில், உள்நாட்டு அரசியல் விவகாரங்களில் சிறிதரன் முன்கை எடுக்கலாம். அயல்நாட்டு விடயங்களில் சுமந்திரன் தனது தலைமைத்துவ பொறுப்பை தொடர்ந்து வகிக்க வேண்டும் என்ற எண்ணம் பரவி இருக்கிறது. அவரது சட்ட அறிவும் வெளிநாட்டு உறவு விடயங்கள் குறித்த அனுபவமும் கட்சிக்கும் சமகாலம் மற்றும் எதிர்கால தமிழ் மக்களுக்கும் தேவையான ஒரு விடயம்.

ஒரு வகையில், சிறிதரனும் சுமந்திரனும் ஒரு வண்டியில் பூட்டிய இரட்டை காளைகள். இரண்டுமே ஒரே சீராக, ஒரே திசையில் பயணித்தால் மட்டுமே, தமிழ் சமூக- அரசியல் பரப்பு என்ற வண்டி தனது இலக்கை சென்றடையும். இல்லையென்றால், வண்டி வழியில் குடைசரியும். இதுதான் கடந்த காலங்களில், தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணிக்கும், தமிழ் தேசிய கூட்டணிக்கும் நிகழ்ந்த முடிவுகள்.

### எதேச்சாதிகார போக்கு

இன்று, தமிழ் சமூக- அரசியல் குரல் தெளிவாகவும் உறுதியாகவும் தென்னிலங்கை வரை பரவவேண்டும் என்றால், நாடாளுமன்றத்தின் உள்ளேயும் வெளியேயும் கேட்கப்பட வேண்டுமென்றால், அனைத்து தமிழ் அரசியல் கட்சிகளும் ஒன்றிணைந்து செயல்படவேண்டும். அதற்கு முதல் முயற்சி எடுக்கப்போவதாக சிறிதரன் பத்திரிகை செவ்விகள் மூலம் அறிவித்துள்ளார். அது வரவேற்க்க தக்கவிடயம்.

ஆனால், அவரது கருத்து என்ன, என்பதை இன்னமும் தெளிவுபடுத்த வேண்டும். குறிப்காக தான் தலைமைத்துவம் வகிக்க இருக்கும் தமிழ் அரசு கட்சியிடம் அதற்கான ஆதரவையும் உத்தரவையும் அவர் பெற்றுக் கொள்ளவேண்டும். இல்லாமல், முந்தைய சம்மந்தன் - மாவை தலைமைகள் போல், எதேச்சாதிகார போக்கில் அவர் செயல்பட்டால், தமிழ் அரசியல் பரப்பு கழுதை தேய்ந்து கட்டெறும்பான கதையாக முடியும். அவரும்தான் காணாமல் போய்விடுவார்.

தனது முதல் முயற்சி, காணாமலாக்கப்பட்ட தமிழ் தேசிய கூட்டமைப்பை மீண்டும் புனரமைத்து செயல்பட வைக்கவேண்டும் என்று சிறிதரன் கூறி உள்ளார். அது வரவேற்கத்தக்க முயற்சி. ஆனால், அதற்கு முதல் முட்டுக்கட்டை, தனி நபர் கௌரவம் மற்றும் வறட்டு கௌரவம் மட்டுமல்ல. நடைபெறாமல் போன உள்ளாட்சித் தேர்தல்களின்போது, தமிழ் அரசால் புறம்தள்ளப்பட்ட பிற கட்சிகள் கூட்டமைப்பை விட்டு பிரிந்தன. அதோடு, தாங்கள் தான் புதிய கூட்டமைப்பு என்று கூறி, வேறு சில -பல சிறு கட்சிகளையும் சேர்த்துக்கொண்டு செயல்பட்ட வருகின்றன.

இந்தப் புதிய கூட்டமைப்பு, தங்களை தேர்தல் ஆணையத்தில் புதிய கட்சியாக பதிவு செய்து கொண்டு, மயில் சின்னத்தை தேர்ந்தெடுத்து உள்ளாட்சி தேர்தலுக்காக பிரச்சாரமும் செய்து வந்தனர். முன்னர் அவர்களது முக்கிய பிரச்சினையே, கூட்டமைப்பின் உறுப்பு கட்சிகள் அனைவருமே அனைத்து தேர்தல்களிலும் தமிழ் அரசு கட்சியின் ‘வீடு’ சின்னத்தில் போட்டியிட கட்டாயப்படுத்தப்பட்டமைதான்.

### நடவாத பேச்சு

தமிழ்த் தேசிய கூட்டமைப்பும் பழைய நிலைமைக்குத் திருப்பவேண்டும், பிற தமிழ் கட்சிகளுடனும் அரசியல் மற்றும் தேர்தல் உறவுகள் வைத்துக்கொள்ளவேண்டும் என்ற சிறிதரனின் முயற்சிக்கு வடிகால்தான் என்ன? பார்ப்பதற்கும் கேட்பதற்கும் ஏற்புடையதாக தோன்றாவிட்டாலும், மறந்துபட்ட தமிழ் தேசிய விடுதலை முன்னணியை உயிர்ப்பிப்பது ஒரு வழியாக இருக்கலாம்.

தமிழ் அரசு கட்சியை வீடு சின்னத்தோடு தோற்றுவித்த தந்தை செல்வா தான் விடுதலை முன்னணியையும் தோற்றுவித்தவர். அவரேதான், முன்னணியின் உதய சூரியன் சின்னத்தையும் தேர்ந்தெடுத்துப் பரப்பியவர். எனவே, இது போன்ற மாறுதலுக்கு தமிழ் அரசுக் கட்சிக்குள் அதிக எதிர்ப்பு இருக்கக்கூடாது.

கூட்டமைப்பு, விடுதலை புலிகள் அமைப்பின் தயாரிப்பு என்று கூறுவோர் உள்ளனர். எது எப்படியோ, இனப்போர் முடிவடைந்து கடந்த 15 வருடங்களில், கூட்டமைப்பும் கூட்டணியும் ஒருமித்துச் செயல்படாததற்கு தலைமைத்துவ போட்டி மனப்பான்மையே முக்கிய காரணம்.

இனப்போர் முடிந்த காலகட்டத்தில், 2010 நாடாளுமன்ற தேர்தல் காலத்தில்கூட, கூட்டணியின் தலைவரான அனந்தசங்கரி, ஒரே அணியாக தமிழர்கள் போட்டியில் நின்றால், உதய சூரியன் சின்னத்தை விட்டுகொடுப்பதாக கூறி வந்தார். சம்மந்தனோ, தேர்தல் சின்னம் குறித்து பேசாமல், தானே டெலிபோன் கால் எடுத்து சங்கரிக்கு வட மாகாணத்தில் ஒரு நாடாளுமன்ற இடத்தை ஒதுக்கி தருவதாக வாக்களித்தார். அவரோ ஐந்து ஆசனங்கள் கேட்டார். அதனால்தான் நடவாத பேச்சு முறிந்து போனது.

ஆனால், சம்மந்தனின் முன்னெடுப்பால், சித்தார்த்தனின் புளொட் கட்சி கூட்டமைப்பில் அங்கத்துவம் பெற்றது. ஆனால், அதே சம்மந்தன், சுரேஸ் பிரேமசந்திரனின் அழுத்தம் காரணமாக ஈ.பி.ஆர்.எல்.எப். கட்சியின் பிற பிரிவுகளை கூட்டமைப்பிற்குள் உள்வாங்கிக் கொள்ளவில்லை. அந்தக் காலகட்டத்தில், மஹிந்த ராஜபக்ச அரசில் அமைச்சராக இருந்து டக்ளஸ் தேவானந்தாகூட, பதவியை துறந்துவிட்டு கூட்டமைப்போடு சேர்ந்து செயல்பட தயாராக இருந்தார். அதன் காரணமாகவே, அவர் கொழும்பு கூட்டமைப்பு தலைமை அலுவலகத்தில் நடந்தேறிய ஒன்றிரண்டு ஒற்றுமைக் கூட்டங்களில் பங்கேற்றார்.

### அபத்தமான வாதம்

தற்போது, தமிழர் ஒற்றுமைக்காக உள்நாட்டில் உள்ள அரசியல் கட்சிகளுடனும் புலம்பெயர்ந்தோர் அமைப்புகளுடனும் பேச போவதாக சிறிதரன் அறிவித்துள்ளார். அது போன்றே, தமிழ் நாட்டுடனும் உறவாடப்போகிறார் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதில், முதலாவதாக கூறப்பட்ட முயற்சி வரவேற்கத் தக்கது. புலம்பெயர்ந்தோரை பொறுத்தவரையில், இனப்போர் காலகட்டத்தில், அவர்களது, அரசியல், பொருளாதார ஆதரவு விடுதலை புலிகள் அமைப்பிற்கு அதீதமாக தேவைப்பட்டது. அவர்களும் உணர்வுபூர்வமாக தங்களது தாய் நாட்டுடன் இணைந்திருப்பதாக கூறி, அந்த அமைப்பை தவறாக வழிநடத்தினார்கள்.

இன்றைய நிலைமையில், எப்போது அவர்கள் தங்களது இரட்டை குடியுரிமை அல்லது வெளிநாட்டு குடியுரிமையை விட்டுவிட்டு, இலங்கையில் வந்து குடும்பத்துடன் குடியேறுகிறார்களோ, அப்போது மட்டுமே அவர்களுக்கு இனப்பிரச்சினை குறித்து பங்களிக்க தார்மீக உரிமை உள்ளது. இதனை சிறிதரன் தரப்பு உன்னிப்பாக அவதானிக்க வேண்டும்.

அது போன்றே, இனப்பிரச்சினையில் தமிழ் நாட்டுடன் சார்ந்து செயல்பட வேண்டும் என்பது அபத்தமான வாதம். கடந்த காலங்களில், இலங்கை தமிழர்களின் அவதிக்கு தமிழ் நாட்டில் பல்வேறு குரல்கள் தொடர்ந்து ஒலிதது வந்தன. ஆனால், தேர்தலில் இலங்கை இனத்தவர்களுக்கு ஆதரவான வாக்குகளாக அவை ஒரு போதும் மாறியது இல்லை.


ஏன், இனப்போர் உச்சகட்டத்தை அடைந்திருந்த 2009ஆம் ஆண்டு, இந்திய நாடாளுமன்ற மக்களவை தேர்தலில்கூட, விடுதலை புலிகள் அமைப்புடன் அடையாளம் காணப்பட்ட வைகோ, தனது சொந்த தொகுதியான சிவகாசியின் 15.000 வாக்குகள் வித்தியசத்தில் தோறகடிக்கப்பட்டார். அவர், உள்நாட்டு அரசியல் மற்றும் அன்றாட பிரச்சினைகளைவிட இலங்கை இனப்பிரச்சினையை முன்னிறுத்தி அரசியல் செய்கிறார் என்ற ஒரே காரணத்திற்காக, வளர்ந்து வந்த அவரது மதிமுக கட்சி, காணாமலே போய்விட்டது.

தற்போதும், இலங்கை இனப்பிரச்சினையை முன்னிறுத்தி தேர்தல் அரசியல் செய்துவந்த நாம் தமிழர் கட்சி தலைவர் சீமான், தனது அரசியல் பரப்பை உள்நாட்டு பிரச்சினைகளோடு முன்னெடுக்க தொடங்கிய பின்னரே அவரது கட்சியின் வாக்கு சதவீதமும் அதிகரித்து உள்ளது. அவர் தனது அரசியல் திசையை முன்னதை போல் மாற்றினால், அவரும் காணாமல் போய்விடுவார்!

காலைக்கதிர்
Kalaikkathir

# போதைப்பழக்கத்தால் ஏற்படும் உடல்நல பாதிப்புகள்

தெய்வேந்திரம் வஜிதா






உலக நாகரிகம் வளர்ச்சி பாதையில் செல்கின்ற அதே தருணத்தில் சில தீய பழக்கங்கள் வலிமை பெற்றுச் செல்கின்றது. குறிப்பாக போதைப்பொருள் பாவனை என்பது சமூகத்தில் அதிகளவில் காணப்படுகின்றது. போதைப் பொருள் பாவனை மற்றும் கடத்தல் செயற்பாடுகளை ஒழிக்க அதிக நாடுகள் முயற்சித்தும் இவை இரண்டும் குறைந்தபாடில்லை. இவைகளின் தாக்கம் அதிகரித்து கொண்டே செல்கின்றது.

மது மற்றும் போதை பொருட்களில் உடல்நல னுக்கு பாதிப்பினை உண்டாக்குகிற, அப்பழக்கத்தைத் தூண்டுகிற வேதிப்பொருட்கள் அதிக அளவு கலப்பதால் பெரும்பாலானோர் போதை நோயாளிகளாக மாறுவதோடு மன நோயாளிகளாகவும் மாறுகின்றனர். உலக அளவில் தற்போது போதைப் பொருள் பயன்பாடு மிகவும் கடுமையான சுகாதார பிரச்சினையாக உள்ளது. இப்படி போதைப்பழக்கம்சமூகத்தின்சாபக்கேடாகமாறிவருகிறது. உலகம் முழுவதும் 2.30 கோடி மக்கள் பல்வேறு வகையான போதைப் பொருட்களைப் பயன்படுத்துவதாக ஐக்கிய நாடுகளின் புள்ளி விவரம் தெரிவிக்கிறது. நகர்ப்புறங்களில் சிகரெட், மது மற்றும் போதைப் பொருள் பழக்கமானது ஆண்கள் மட்டுமின்றி பெண்களிடத்திலும் அதிகரித்து வருவதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

ஒருவர் தன் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண குடி மற்றும் போதைப் பொருட்களை நாடுகிறாரோ, அவருக்கு பிரச்சினை ஏற்படும் போதெல்லாம் அந்தப் பொருட்களின் துணையுடனே அவர் தீர்வு காண முயற்சிக்கும் நிலை ஏற்படுகிறது. இப்படி ஏதோ ஒரு விதத்தில் ஒரு போதைப் பொருளை முதலில் பயன்படுத்தத் தொடங்கியவர்கள் நாட்கள் செல்லச் செல்ல அடுத்தடுத்து எல்லா வகையான போதைப் பொருட்களையும் பயன்படுத்திப் பார்க்கவிரும்புகிறார்கள். போதைப் பொருள் ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு வகை வேதிப்பொருள் உள்ளது. அவை ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு விதமான உணர்வும், சந்தோஷமும் கிடைப்பதாக அதைப் பயன்படுத்துவோர் தெரிவிக்கின்றனர்.

போதைக்கு அடிமையாகிவிட்டால் சொந்த வீட்டிலேயே திருடுதல், பொருட்களை எடுத்து அடகு வைப்பது, பிச்சை எடுப்பது, அசிங்கமாக நடந்துகொள்வது, பிறரை துன்புறுத்துதல் போன்ற செயல்களில் ஈடுபடுகின்றனர். வெளியிடங்களில் அடிதடி, கொலை, கொள்ளை, தீவிரவாதம் மற்றும் பாலியல் தொந்தரவுகள் செய்வது போன்ற வன்முறை செயல்களிலும் ஈடுபடுகின்றனர்.

இத்தகைய பழக்கங்களுக்கு ஆளானவர்களுக்கு நாளடைவில் மூச்சுத்திணறல், சளி, இருமல் போன்ற பிரச்சினைகள் ஏற்படுவதோடு, உணவுக்குழாயிலும், கணையத்திலும், கல்லீரலிலும் பாதிப்பு ஏற்படுகிறது. சரியாக உணவு எடுத்துக்கொள்ள முடியாமல் போவதால் வயிற்றில் புண், எடை குறைவு, நோய் எதிர்ப்பு சக்தி குறைவு, உடல் சோர்வு போன்ற பிரச்சினைகள் ஏற்படுகிறது. இதைத் தொடர்ந்து மூளையில் ஏற்படும் பாதிப்புகளால் தானாகவே பேசிக்கொள்வது, பயம், மனச்சோர்வு, மனக் குழப்பம் போன்ற பிரச்சினை உண்டாகிறது.



பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பது, முடிவெடுப்பதில் சிக்கல், சிந்தனைத்திறன் குறைவு, ஞாபகமறதி, தனக்கு ஏதாவது நடந்துவிடுமோ என்று கற்பனை செய்துகொண்டு அதன்படி நடந்து கொள்வது போன்ற மனநல பிரச்சினைகளும் ஏற்படுகிறது. மது உடலின் உள்ளே செல்லச் செல்ல நம் உடலிலுள்ள வைட்டமின்களை அது அழித்து விடுகிறது.

மேலும் கல்லீரல், சிறுநீரகம், இதயம் சார்ந்த பிரச்சினைகளும், கொலஸ்ட்ரால், நீரிழிவு, ரத்த அழுத்தம் சார்ந்த பிரச்சினைகளும் உண்டாகிறது. தற்போது மது மற்றும் போதை பொருட்களில் உடல்நலனுக்கு பாதிப்பினை உண்டாக்குகிற, அப்பழக்கத்தைத் தூண்டுகிற வேதிப்பொருட்கள் அதிக அளவு கலப்பதால் பெரும்பாலானோர் போதை நோயாளிகளாக மாறுவதோடு மனநோயாளிகளாகவும் மாறுகின்றனர். போதை மற்றும் குடிப்பழக்கம் உடையவர்கள் செய்கிற குற்றச் செயல்களால் முதலில் குடும்ப உறுப்பினர்களே அதிகம் பாதிக்கப்படுகின்றனர். இதனால் சமூகத்தில் மரியாதை குறைவு, சமூகப் புறக்கணிப்பு மற்றும் பணப் பிரச்சினைகளும் உண்டாகிறது.

**மன ரீதியான பிரச்சினைகள் ஏற்படும்.**

மூளையில் ஏற்படும் பாதிப்புகளால் தானாகவே பேசிக்கொள்வது, பயம், மனச்சோர்வு, மனக் குழப்பம் போன்ற பிரச்சினைகள் உண்டாகின்றது.

சிந்தனைத்திறன் குறைவு, ஞாபகமறதி, தனக்கு ஏதாவது நடந்துவிடுமோ என்று கற்பனை செய்துகொண்டு அதன்படி நடந்து கொள்வது போன்ற மனநல பிரச்சினைகளும் ஏற்படுகிறது.

**குடும்ப நபர்களுக்கும் பாதிப்பை ஏற்படுத்துகிறது.**

போதை மற்றும் குடிப்பழக்கம் உடையவர்கள் செய்கிற குற்றச் செயல்களால் முதலில் குடும்ப உறுப்பினர்களே அதிகம் பாதிக்கப்படுகின்றனர்.

**விபத்துக்கள் ஏற்படுகின்றன.**

வாகனம் ஓட்டுபவர்கள் போதையைப் பயன்படுத்துவதால் கவனம் சிதைந்து விபத்துக்களுக்கு உள்ளாகி உயிர் இழப்புகளை ஏற்படுத்தும் வாய்ப்புக்கள் அதிகமாக உள்ளன. அது மட்டுமன்றி சொத்திழப்புக்கள், அவயவங் கள் இழப்புக்களும் ஏற்படுகின்றன.

**சமூக அந்தஸ்து இழக்கப்படுகின்றது.**

போதை மற்றும் குடிப்பழக்கம் உடையவர்கள் செய்கிற குற்றச் செயல்களால் சமூகத்தில் மரியாதை குறைவு, சமூகப் புறக்கணிப்பு என்பவை ஏற்படுகின்றது.

போதைப் பொருப்பாவனைகள் என்பது தனிமனிதன் மட்டுமல்ல சமுதாயத்தையும் தாண்டி நாட்டிற்கும் கேடு விளைவிக்கின்றன. எனவே இதனை தடுத்து நிறுத்தி முழுதாக ஒழிக்கப்பட வேண்டும். ஆரோக்கியமான வாழ்விற்கு போதைப்பாவனை பெரிதும் தடையாக உள்ளது என்பதனை அனைவரும் உணர வேண்டும். ஒவ்வொரு தனி மனிதனது உள்ளத்திலும் நற்சிந்தனைகளை ஏற்படுத்தி சீர் செய்வதே ஆரோக்கியமானதும் நிரந்தரமானதுமான தீர்வாகும்.

> உலக அளவில் தற்போது போதைப் பொருள் பயன்பாடு மிகவும் கடுமையான சுகாதார பிரச்சினையாக உள்ளது. இப்படி போதைப் பழக்கம் சமூகத்தின் சாபக்கேடாகமாறி வருகிறது. உலகம் முழுவதும் 2.30 கோடி மக்கள் பல்வேறு வகையான போதைப் பொருட்களைப் பயன் படுத்துவதாக ஐக்கிய நாடுகளின் புள்ளி விவரம் தெரிவிக்கிறது.


JRIDE
BEYOND THE ROAD
ஜே ரைட்
ஒன்லைன் ரக்சி அப்
ONLINE TAXI APP FROM JAFFNA
ஆட்டோ கட்டணங்களால் ஆடிப்போயுள்ளீர்களா? கவலையினை விடுங்கள்.
நாங்கள் தயாராகிவிட்டோம்!
யாழ்ப்பாணத்தில் இருந்து உங்களுக்காக உருவாக்கப்பட்ட ரக்சி அப் (Taxi App)
உங்கள் பயணங்களை பாதுகாப்பானதாகவும் மகிழ்ச்சிகரமானதாகவும் செலவு குறைவாகவும் அமைத்துக்கொள்ளுங்கள்.
இப்போதே Play Store இல் இருந்து JRide - Beyond The Road App இனை இறக்கி உங்கள் தொலைபேசி இலக்கத்தை பயன்படுத்தி உங்கள் கணக்கை பதிவு செய்யலாம்!
YOU CAN EASILY
BOOK
+94 21 222 8358
JRIDE TAXI SERVICE
SPEED IT NET
பரமேஸ்வரா சந்தி,
138, பலாலி வீதி
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்
+94 703 563213
www.jride.lk

# சுகாதாரத்துறையின் எதிர்கால மேம்பாட்டுக்கு ஐ.நா.அபிவிருத்தி திட்டம் தொழில்நுட்ப உதவி

இலங்கையில் சிகிச்சை முறைமைகள், டெங்கு ஒழிப்பு உள்ளிட்ட சுகாதார சேவைகளுக்குத் தேவையான நவீன மருத்துவ உபகரணங்களை வழங்குமாறு சுகாதார அமைச்சர் ரமேஷ் பத்திரண, ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி வேலைத் திட்டத்திடம் கோரியுள்ளார்.

சுகாதாரம் மற்றும் கைத்தொழில் அமைச்சர் ரமேஷ் பத்திரண மற்றும் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி வேலைத் திட்டத்தின் இலங்கைக்கான வதிவிடப்பிரதிநிதி அசுசா குபோடா ஆகியோருக்கிடையில் இடம்பெற்ற சந்திப்பின் போதே இவ்விடயம் தொடர்பில் அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.



இலங்கையின் சுகாதாரத்துறையின் எதிர்கால மேம்பாட்டுக்காக நவீன தொழிநுட்பத்தைப் பயன்படுத்துவது தொடர்பில் இதன் போது நீண்ட கலந்துரையாடல் இடம்பெற்றுள்ளது.

இலங்கையில் டெங்கு நுளம்புகள் பரவும் வீதம் சற்று அதிகரித்துள்ளதால், அவற்றைக் கட்டுப்படுத்துவதற்கும், நுளம்புகள் பெருகும் இடங்களைக் கண்டறிவதற்கும், அவற்றை அழிப்பதற்கு தேவையான உபகரணங்களைப் பயன்படுத்துவதற்கும் நவீன தொழில்நுப்த்தைப் பயன்படுத்துவது அவசியமாகும். அதற்கமைய இதற்கான நவீன தொழிநுப் கருவிகளை வழங்குமாறு சுகாதார அமைச்சர், அசுசா குபோடாவிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

இலங்கையில் உள்ள முதியோர் மற்றும் ஊனமுற்றோரின் சிகிச்சைச் சேவைகளுக்கான சுகாதாரப் பராமரிப்பின் செயல்திறன் மற்றும் துரிதத்தன்மையை அதிகரிக்க நவீன தொழில்நுப்த்தைப் பயன்படுத்துவது குறித்தும், நவீன தொழில்நுப்த்தைப் பயன்படுத்தி மருந்துகள் மற்றும் மருத்துவ உபகரணங்களை விரைவுபடுத்தும் முறைகள் குறித்தும் இதன் போது கலந்துரையாடப்பட்டுள்ளது.

உலக சுகாதார ஸ்தாபனம், ஆசிய அபிவிருத்தி வங்கி, எய்ட்ஸ், காசநோய் மற்றும் மலேரியாவை எதிர்த்துப் போராடுவதற்கான உலகளாவிய நிதியம் போன்ற நிறுவனங்கள் தேவையான ஆதரவை வழங்குவதற்காக திறமையான மற்றும் வெளிப்படையான கொள்முதல் செயல்முறையில் ஈடுபட்டுள்ளதாக அசுசா இதன் போது அமைச்சரிடம் தெளிவுபடுத்தினார்.

இது தொடர்பில், சுகாதார அமைச்சின் மானியங்கள் மற்றும் சர்வதேச உறவுகளின் ஒருங்கிணைப்பாளர் வைத்தியர் அன்வர் ஹம்தானிக்கு, ஐக்கிய நாடுகள் சபையின் அபிவிருத்தித் திட்டம் மற்றும் சுகாதாரத் துறையின் தொடர்புடைய துறைகளுடன் தொடர்ந்து தொடர்பில் இருக்குமாறு சுகாதார அமைச்சர் அறிவுறுத்தல்களை வழங்கினார். இலங்கையின் சுகாதாரத் துறைக்கு ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தித் திட்டத்தின் பங்களிப்பை நினைவுகூர்ந்த அமைச்சர், எதிர்காலத்திலும் தொடர்ந்துத் அதற்கான ஆதரவை எதிர்பார்ப்பதாகவும் குறிப்பிட்டார். (05)

# இராணுவத் தளபதி பரசூட் வீரராக தகுதி



இராணுவத்தின் தளபதி லெப்டினன் ஜெனரல் விக்கும் லியனகே ஆர்.டபிள்யூ.பீ.ஆர்.எஸ்.பீ. என்.டி.யூ. இராணுவ பரசூட்டில் தனது நிபுணத்துவம் மற்றும் அறிவின் மூலம் கடந்த திங்கட்கிழமை 22ஆம் திகதி இராணுவ பரசூட் வீரராக தகுதி பெற்றார இராணுவ பரசூட் வீரராக மாறுவதற்கான தளபதியின் பயணம் குடாஓய கொமாண்டோ படையணி பயிற்சிப் பாடசாலையில் இடம்பெற்றது.

திங்கட்கிழமை இராணுவத் தளபதி, மாலைதீவு தேசிய பாதுகாப்புப் படையணியின் 18 படையினர் மற்றும் இலங்கை இராணுவத்தைச் சேர்ந்த 14 படையினர் உட்பட ஏனைய பங்கேற்பாளர்களுடன் உஹான விமானப்படைத் தள ஓடுபாதையில் எம்.ஐ-17 ஹெலிகொப்டரில் விமானத்தில் சென்றார்.

தளபதி உஹான விமானப்படை தளத்தின் துளி மண்டலத்தின் மீது பரசூட் குதித்து, வான்வழி வீரர்களின் குடும்பத்துடன் அதிகாரபூர்வமாக இணைந்தார். இந்த சாதனையானது இராணுவ வரலாற்றில் ஒரு குறிப்பிடத்தக்க தடயமாக லெப்டினன் ஜெனரல் இராணுவ பரசூட் வீரராக காணப்படுவது குறிப்பிடத்தக்கது. அதேவேளை, இராணுவ தளபதியாக பதவி வகிக்கின்றமை சிறப்பம்சமாகும்.

மேலும், இராணுவ தளபதி லெப்டினன் ஜெனரல் விக்கும் லியனகே ஆர்டபிள்யூபீ ஆர்எஸ்பீ என்டியூ இராணுவ பரசூட் வீரராக வெற்றிகரமாக தகுதி பெற்ற சிரேஷ்ட மிக உயர்ந்த இராணுவ வீரர் என்ற குறிப்பிடத்தக்க சிறப்பை அடைந்துள்ளார். ஒழுக்க பணிப்பகத்தின் பணிப்பாளர் நாயகமும் இலங்கை பொலிஸ் படையணியின் படைத் தளபதியுமான மேஜர் ஜெனரல் எசீஎ டி சொய்சா யூஎஸ்பீ எச்டிஎம்சீஎல்எஸ்சீ தளபதியுடன் இணைந்துகொண்டார். (05)



## பொருளாதார...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வீடொன்றிலேயே நான் வசித்து வந்தேன். இந்த அபேசேகரராமவை அண்மித்தகாணியில்அமைந்திருந்த கட்டடத்திலேயே எனது அலுவலகம் காணப்பட்டது.

பொதுத்தேர்தலுக்கு முந்தைய நாள் இரவு அபேசேகரராமவை தரிசித்து ஆசிர்வாதம் வாங்க வேண்டும் என்று அம்மா கூறினார். அதன்படி, விகாரைக்கு வந்து, மறைந்த நாயக்க தேரரைச் சந்தித்து, ஆசிபெற்றேன். தேர்தல் முடிவுகளை மீண்டும் கூற வேண்டிய அவசியம் இல்லை.

எனது அரசியல் வாழ்க்கை இந்த இடத்தில் இருந்து ஆரம்பித்தது. அந்த அரசியல் பயணம் இன்று ஜனாதிபதி பதவியை எட்டியுள்ளது. நான் புதிய வழியில் ஜனாதிபதி பதவிக்கு வந்தேன். ஆட்சியாளர்கள் வீழ்ந்தபோது எவரும் பொறுப்பேற்க முன்வராத வேளையில், நான் பொறுப்பை ஏற்றுக்கொண்டேன்.

நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சி அடைந்திருந்ததால் நான் நாட்டைப் பொறுப்பேற்றேன். மக்கள் வாழ்வாதரத்திற்கு வழி இருக்கவில்லை. எரிபொருள்மற்றும் எரிவாயு இருக்கவில்லை. அந்த நிலை தொடர்ந்தால் இந்த நாட்டின் இருப்பு கேள்விக்குறியாகிவிடும்.

எனவே, இந்த நாட்டைக் காப்பாற்றி பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப வேண்டும் என்பதற்காகவும், அதனைச் செய்ய முடியும் என்ற நம்பிக்கை இருந்ததாலும் ஜனாதிபதிப் பொறுப்பை ஏற்றுக்கொண்டேன்.

இப்போது இரண்டு ஆண்டுகள் கடந்துவிட்டன. இன்று படிப்படியாக நாடு இயல்பு நிலைக்குத் திரும்பிகொண்டிருக்கிறது. இன்று தட்டுப்பாடுகள் இல்லை. ஆனால் பொருளாதாரத்தை மீளக் கட்டியெழுப்புவதில் ஏற்படும் பிரச்சினைகளை நாம் எதிர்கொள்ள வேண்டியிருக்கின்றது. தற்போது அந்த நிலையில் இருந்து படிப்படியாக முன்னேறி வருகிறோம்.

வங்குரோத்து நிலையில் இருந்த இலங்கையின் பொருளாதாரம் தற்போது மீண்டு வந்துள்ளதாக சுவிட்சர்லாந்து பயணத்தின்போது உலகத் தலைவர்களிடம் தெரிவித்தேன். அவர்களில் பலர் இவ்வளவு குறுகிய காலத்தில் நாம் அடைந்திருக்கும் முன்னேற்றம் ஆச்சரியம் அளிப்பதாகத் தெரிவித்தனர்.

உலக வங்கியின் தலைவர் மற்றும் சர்வதேச நாணய நிதியத்தின் முகாமைத்துவப் பணிப்பாளருடன் கலந்துரையாடும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. நாங்கள் பொருளாதார ஸ்திரத்தன்மையை அடைந்துள்ளோம், ஆனால் எங்களின் வருமானம் போதுமானதாக இல்லை.

எனவே, நாட்டின் வருமானத்தை அதிகரிக்க வேண்டியுள்ளது. அதனால்தான், துரதிர்ஷ்டவசமாக, வற் வசூலிக்க வேண்டியேற்பட்டது. இப்போது நாம் எதிர்மறை பொருளாதாரத்திற்கு பதிலாக நேர்மறை பொருளாதாரத்தை நோக்கி நகர்கிறோம்.

புதிய தொழில்துறைகள் மற்றும் புதிய முதலீட்டு வாய்ப்புகளை உருவாக்கி மக்களுக்கு தொழில் வாய்ப்பை வழங்கவேண்டும். அதற்கான தகுந்த சூழலை உருவாக்கும் முயற்சியில் தற்போது ஈடுபட்டுள்ளோம். நாடு முழுவதும் பியகம முதலீட்டு வலயம் போன்ற முதலீட்டு வலயங்களை உருவாக்கி நாட்டின் பொருளாதார வேகத்தை பத்து மடங்கு அதிகரிக்கத் திட்டமிட்டுள்ளோம்.

இங்கே நாம் பியகமவை உதாரணமாக எடுத்துக்கொள்வோம். அன்று நான் பியகமவுக்கு வந்தபோது இங்கு எதுவுமில்லை என முன்பே கூறினேன். ஆனால் திறந்த பொருளாதாரத்தில் இந்தப் பகுதியை மேம்படுத்த முடியும் என்று நான் நம்பினேன். ஜே.ஆர் ஜயவர்தன கட்டுநாயக்கவில் முதலாவது முதலீட்டு வலயத்தை ஆரம்பித்து வைத்தார். அப்போதும் கட்டுநாயக்க ஒரு அபிவிருத்தியடைந்த பிரதேசமாக இருந்தது.

நான் இரண்டாவது முதலீட்டு வலயத்தை பியகமவிற்கு வழங்குமாறு ஜே.ஆர். ஜயவர்தன ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்தேன். பியகம போதியளவு வளர்ச்சியடையவில்லை, எனவே அதனை வேறு பகுதிக்குக் வழங்குவோம் என்றார்கள் சிலர். எம்முடன் இருப்பவர்களே இதை ஏன் கேட்கிறீர்கள், இதனால் பயன் இல்லை என்றார்கள். ஆனால் நாங்கள் பியகம முதலீட்டு வலயத்தை ஆரம்பிக்க நடவடிக்கை எடுத்தோம்.

மேலும், இப்பகுதியில் உட்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்பட்டன. இத்தீர்மானங்களால் அன்று பின்தங்கியிருந்த பியகம இன்று பெரும் அபிவிருத்தியை அடைந்துள்ளது. அதன்படி பியகம மற்றும் கட்டுநாயக்க முதலீட்டு வலயங்கள் தெற்காசியாவின் சிறந்த முதலீட்டு வலயமாக மாறியுள்ளன. நான் பியகமவுக்கு வந்தபோது 15 தொழிற்சாலைகளே இருந்தன. இன்று இங்கு 180 பெரிய தொழிற்சாலைகளும், 275 நடுத்தர மற்றும் சிறிய தொழிற்சாலைகளும் உள்ளன. இன்று இங்கு பெருமளவான பொருளாதாரம் உருவாகியுள்ளது. அப்போது 200 விற்பனை நிலையங்கள்கூட இருக்கவில்லை. இன்று 4,227 விற்பனை நிலையங்கள் உள்ளன.

தொழிலாளர்களுக்கு உணவு மற்றும் பானங்கள் வழங்க 597 சிற்றூண்டிச் சாலைகளும் உள்ளன. 316 இலத்திரனியல் விற்பனைநிலையங்கள் உள்ளன. 2 சுற்றுலா விடுதிகள் உள்ளன. இங்கு முழுமையான பொருளாதாரம் கட்டமைக்கப்பட்டுள்ளது. பியகமவின் அபிவிருத்தியுடன் களனியும் பல துறைகளில் அபிவிருத்தி கண்டது.

எனவே பியகம திறந்த பொருளாதாரத்தை முழுமையாகப் பயன்படுத்திக்கொண்டது. அதனுடன் களனியும் இணைந்துகொண்டது. குறுகிய காலத்தில் தலுகம, கிரிபத்கொட, மாகொல, மாவரமண்டிய, கடவத்தை ஆகியன பெரும் பொருளாதாரத்தை கொண்ட பகுதிகளாக மாறின.

மேலும், இந்த அபிவிருத்தியை நாட்டின் ஏனைய பிரதேசங்களிலும் செய்யதிட்டமிட்டுள்ளோம். பிங்கிரிய, கண்டி, ஹம்பாந்தோட்டை, திருகோணமலை, வடக்கு உள்ளிட்ட பகுதிகளை முதற்கட்டமாக அடையாளம் கண்டிருக்கிறோம். எனவே, திறந்த பொருளாதாரத்தைப் பயன்படுத்தி, தேசிய பொருளாதாரத்தை பத்து மடங்கு உயர்த்த திட்டமிட்டுள்ளோம்.' என்று ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க மேலும் தெரிவித்தார்.



## சமூக வலைத் தளங்களை இடைநிறுத்தியே திகன கலவரத்தைக் கட்டுப்படுத்தினேன்

**மைத்திரிபால சிறிசேன கூறுகிறார்**

பொய்யான தகவல்களைப் பரப்புபவர்களுக்கு தண்டனை வழங்கக் கூடிய வகையில் நாட்டில் ஊடக கட்டுப்பாட்டு சட்டம் அவசியமாகும். சமூகலைத்தளங்களை ஒருவார காலத்துக்கு இடைநிறுத்தியதன் மூலமே திகன கலவரத்தை கட்டுப்பத்த முடிந்தது என முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நடைபெற்ற நிகழ்நிலை காப்புச் சட்டம் மீதான இரண்டாம் நாள் விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் கூறுகையில் –

ஊடகங்களுக்கு முகாமைத்துவமும், ஊடக கட்டுப்பாடுகளும் இருக்க வேண்டும். நிகழ்நிலை காப்புச் சட்டத்தில் சட்டதிட்டங்கள் கடுமையானதாக இருந்தாலும் ஊடகங்கள் தொடர்பில் கட்டுப்பாடுகள் அவசியமாகும்.

எமது நாட்டில் சில ஊடகங்கள் மிகவும் மோசமான முறையிலேயே செயற்படுகின்றன.

எனது மூத்த மகளின் வீட்டுக்குள் திருடர்கள் நுழைந்துள்ளனர். அரிசி, தேங்காய் போன்ற சமையலறையில் இருந்த பொருள்களையே கொண்டு சென்றுள்ளனர்.

எனக்கு கட்டாரில் அரச தலைவருக்காக வழங்கப்பட்ட பரிசொன்றை பொலன்னறுவை நூதனசாலையில் வைத்துள்ளேன். ஆனால் ஊடகமொன்றில் காலையில் பத்திரிகை செய்தி வாசித்த அறிவிப்பாளர் ஒருவர் அரச தலைவர் ஒருவருக்கு வழங்கப்பட்ட பரிசை தனது மகளின் வீட்டில் வைத்திருந்ததாகக் கூறியுள்ளார். அது பொய்யாகும். நான் நூதனசாலையிலேயே எனக்கு கிடைத்த பொருள்களை வைத்துள்ளேன்.

நான் ஜனாதிபதியாக இருக்கும்போது கிடைத்த அனைத்து பொருள்களையும் அந்த நூதனசாலையிலேயே வைத்துள்ளேன்.

ஆனால் ஊடக நிறுவனங்களின் செயற்பாடுகள் தவறானவையாக உள்ளன. இதனை மாற்ற வேண்டும். தவறு செய்தவர்களுக்கு தண்டனை வழங்கப்பட வேண்டும்.

எனக்கு கிடைக்கப்பெற்ற பொருள்கள் அனைத்தையும் பொலன்னறுவையில் உள்ள நூதனசாலைக்கு சென்று பார்த்துக்கொள்ள முடியும்.

அத்துடன் நான் ஜனாதிபதியாக இருந்த காலத்தில் திகனவில் கலவரம் ஏற்பட்ட போது ஒருவாரத்திற்கு சமூக வலைத்தளங்களை முடக்கினேன். அதனை நான் செய்யாமல் இருந்திருந்தால் நாட்டில் சிங்கள முஸ்லிம் கலவரம் நாடு முழுவதும் ஏற்பட்டிருக்கும்.

சமூகவலைத்தளங்களை ஒருவார காலத்துக்கு இடைநிறுத்தியதாலேயே அதனைக் கட்டுப்படுத்த முடிந்தது. எவ்வாறாயினும் தவறிழைத்தவர்களுக்கு தண்டனை கொடுக்கும் வகையில் சட்டங்கள் இருக்க வேண்டும். என்றாலும் இந்த சட்டமூலத்தில் இருக்கும் விடயங்கள் மிகவும் இறுக்கமானதாகும்.

ஊடக ஒழுங்குமுறை, கட்டுப்பாடு அவசியமாகும். இல்லையென்றால் ஊடக உரிமையாளர்களே நாட்டை நிர்வாகம் செய்யும் நிலைமை ஏற்படும். – என்றார். (05)

## பொலிஸ் உயர் அதிகாரிகள் மூன்று பேருக்கு இடமாற்றம்

தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் அங்கீகாரத்துடன் பதில் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் மூன்று பிரதிப் பொலிஸ் மா அதிபர்களுக்கு 24 ஆம் திகதி முதல் இடமாற்றம் வழங்கியுள்ளார்.

அதன்படி, போக்குவரத்து மற்றும் தொடர்பாடல் பிரிவுக்கு பொறுப்பான பிரதி பொலிஸ் மா அதிபராக இருந்த கே.கடுப்பிட்டிய மேல் மாகாண வடக்கு பிரிவுக்குப் பொறுப்பான பிரதிப் பொலிஸ் மா அதிபராக நியமிக்கப்பட்டுள்ளார்.

யாழ்.மாவட்டத்துக்குப் பொறுப்பான பிரதிப் பொலிஸ் மா அதிபர் எம். ஆர்.ஏ.எம். செனரத் அந்தப் பதவியிலிருந்து போக்குவரத்து மற்றும் தொடர்பாடல் பிரிவுக்குப் பொறுப்பான பிரதிப் பொலிஸ் மா அதிபராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை, யாழ்.மாவட்டத்துக்கு பொறுப்பான பிரதி பொலிஸ் மா அதிபராக ஜே.இ.கே.ஜெயசிங்க நியமிக்கப்பட்டுள்ளார். (05)






இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 26.01.2024இல் வெளியிடப்பெற்றது.